உ

திருச்சிற்றம்பலம்

# திருமுறைப் பயிற்சிக் கழகம்

**திருமுறைப் பாடத்திட்டம்**

**நிலை நான்கு**


**தொகுப்பாக்கம்**

டாக்டர். ஆ. ரா. சிவகுமாரன்

சிவ ரா. பழனிவேல்


ஒலிப்பேழையில்பாடியவர்:

தேவார இசைமணி

சிவத்திரு **புகழேந்தி மகேஸ்வரன் ஓதுவார்**

ஸ்ரீ ருத்ர காளியம்மன் கோயில்


வெளியீடு

திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக்குழு

சிங்கப்பூர்

2014

# உள்ளடக்கம்


1. துதிப் பாடல்கள் ....... 5
2. திருமுறைப் பாடல்கள் ....... 5
   - **2.1 திருஞானசம்பந்தர் தேவாரம் -** துணிவளர் ....... 5
   - **2.2 திருஞானசம்பந்தர் தேவாரம் -** அகமலி ....... 5
   - **2.3 திருஞானசம்பந்தர் தேவாரம் -** நாளாய ....... 6
   - **2.4 திருஞானசம்பந்தர் தேவாரம் -** நம்பனைநல் ....... 6
   - **2.5 திருஞானசம்பந்தர் தேவாரம் -** வாசி ....... 6
   - **2.6 திருஞானசம்பந்தர் தேவாரம் -** காழி ....... 7
   - **2.7 திருஞானசம்பந்தர் தேவாரம் -** அவ்வினைக்கு ....... 7
   - **2.8 திருஞானசம்பந்தர் தேவாரம் -** பிறந்த ....... 7
   - **2.9 திருஞானசம்பந்தர் தேவாரம் -** கண்காட்டு ....... 8
   - **2.10 திருஞானசம்பந்தர் தேவாரம் -** தண்பொழில்சூழ் ....... 8
   - **2.11 திருஞானசம்பந்தர் தேவாரம் -** வேயுறு ....... 8
   - **2.12 திருஞானசம்பந்தர் தேவாரம் -** தேனமர் ....... 9
   - **2.13 திருஞானசம்பந்தர் தேவாரம் -** காதலாகி ....... 9
   - **2.14 திருஞானசம்பந்தர் தேவாரம் - நந்தி** ....... 10
   - **2.15 திருஞானசம்பந்தர் தேவாரம் - மங்கை** ....... 10
   - **2.16 திருஞானசம்பந்தர் தேவாரம் -** பன்னலம் ....... 10
   - **2.17 திருநாவுக்கரசர் தேவாரம் -** கரவாடும் ....... 11
   - **2.18 திருநாவுக்கரசர் தேவாரம் -** அடுத்தானை ....... 11
   - **2.19 திருநாவுக்கரசர் தேவாரம் -** ஒன்றுகொலாம் ....... 11
   - **2.20 திருநாவுக்கரசர் தேவாரம் -** பத்துக்கொலாம் ....... 12
   - **2.21 திருநாவுக்கரசர் தேவாரம் -** பத்தனாய் ....... 12
   - **2.22 திருநாவுக்கரசர் தேவாரம் -** பத்துக்கொலாம் ....... 12
   - **2.23 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** தலைக்குத்தலை ....... 13
   - **2.24 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** எந்தம் ....... 13
   - **2.25 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** முத்தா ....... 14
   - **2.26 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** எந்தம் ....... 14
   - **2.27 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** பரவும் ....... 14
   - **2.28 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** எந்தம் ....... 15
   - **2.29 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் -** வளைந்தது ....... 15
   - **2.30 மாணிக்கவாசர் அருளிய திருவாசகம்-** ஏகாசம் ....... 15
   - **2.31 திருமாளிகைத் தேவர் அருளிய திருவிசைப்பா -** பத்தியாய் ....... 16
   - **2.32 சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு -** குழலொலி ....... 16

**2.33 திருமுல நாயனார் அருளிய திருமந்திரம் -** நாடும் ........ 17
**2.34 காரைக்கால் அம்மையார் அருளியது -** பிறந்து ........ 17
**2.35 சேக்கிழார் அருளிய பெரியபுராணம் -** திருநாவுக்கரசு ........ 17
**2.36 சேக்கிழார் அருளிய பெரியபுராணம் - ஐந்து** ........ 18
3. திருமுறைப் பதிகங்கள் ........ 18
**3.01 திருஞானசம்பந்தர் தேவாரம் – மறையுடையாய்** ........ 18
**3.02 திருஞானசம்பந்தர் தேவாரம் -** துஞ்சலும் ........ 20
**3.03 திருநாவுக்கரசர் தேவாரம் -** கூற்றாயின ........ 22
**3.04 சுந்தரர் தேவாரம் - பித்தா** ........ 25
**3.05 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - திருவெம்பாவை** ........ 26
4. வாழ்த்துப் பாடல்கள் ........ 30
**4.1 வாழ்த்து - ஆறிருதடந்தோள்** ........ 30
**4.2 வாழ்த்து - வான்முகில்** ........ 31
5. உரைநடை ........ 32
**5.1 சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம்** ........ 32
**5.2 திருநீறு** ........ 33
**5.3 சிவாலய வழிபாடு** ........ 40
**5.4 உருத்திராக்கம்** ........ 43
**5.5 திருத்தலங்கள் – திருவண்ணாமலை** ........ 46
**5.6 திருத்தலங்கள் – திருஆலவாய்** ........ 49
**5.7 திருத்தலங்கள் – திருவாரூர்** ........ 50
**5.8 நாயன்மார்கள் வரலாறு – கண்ணப்பர்** ........ 56
**5.9 நாயன்மார்கள் வரலாறு – சிறுத்தொண்டர்** ........ 63
**5.10 நாயன்மார்கள் வரலாறு – கணம்புல்ல நாயனார்** ........ 68
**5.11 நாயன்மார்கள் வரலாறு – மெய்ப்பொருள் நாயனார்** ........ 69
**5.12 சைவசமயத்தில் வழிபாடு** ........ 70
**5.13 திருவிழாக்கள் - பிரதோசம்** ........ 74

# 1. துதிப் பாடல்கள்

### 1.1 திருமுறை அருளாளர்கள்

திருஞானசம்பந்தர் வாகீசர் சுந்தரர் திருவாதவூரர் மற்றை
திருமாளிகைத் தேவர் சேந்தனார் கருவூரர் தெள்ளு பூந்துருத்தி
நம்பி வருஞான கண்டராதித்தர் வேணாட்டடிகள் வாய்ந்த
திருவாஆலியமுதர் மருவு புருடோத்தமர் சேதிராயர் மூலர் மன்னு
திருஆலவாயார் ஒரு காரைக்கால் அம்மை ஐயடிகள் சேரமான்
ஒளிர்கீரர் கல்லாடனார் ஓண் கபிலர் பரணர் மெய் உணர்
இளம்பெருமானோடு ஓங்கும் அதிராவடிகளார் திருமேவும்
பட்டினத்தடிகள் நம்பியாண்டார் நம்பி சேக்கிழாரும்
சிவநெறி திருமுறைகள் பன்னிரண்டு அருள்செய்த
தெய்வீகத் தன்மையோரே.

# 2. திருமுறைப் பாடல்கள்

## 2.1 திருஞானசம்பந்தர் தேவாரம் - துணிவளர்

தலம்: திருப்பாச்சிலாச்சிராமம்

திருமுறை: 1-44-1

பண் : தக்கராகம்

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

துணிவளர் திங்கள் துளங்கிவிளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோலமெலாம்செய்து பாச்சி லாச்சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்மாண்பே. 01

திருச்சிற்றம்பலம்

## 2.2 திருஞானசம்பந்தர் தேவாரம் - அகமலி

தலம்: திருப்பாச்சிலாச்சிராமம்

திருமுறை: 1-44-11

பண் : தக்கராகம்

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

அகமலி அன்பொடு தொண்டர்வணங்க ஆச்சிராமத்து உறைகின்ற
புகைமலி மாலை புனைந்தழகாய புனிதர்கொலாம் இவரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தருகாழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவையேத்தச் சாரகிலா வினைதானே. 11

திருச்சிற்றம்பலம்

## 2.3 திருஞானசம்பந்தர் தேவாரம் - நாளாய

தலம்: திருக்கோளிலி

திருமுறை: 1-62-1

பண் : பழந்தக்கராகம்

தாளம் : ரூபகம்

திருச்சிற்றம்பலம்

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய வன்புசெய்வோ மடநெஞ்சே யரனாமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே.

திருச்சிற்றம்பலம்

## 2.4 திருஞானசம்பந்தர் தேவாரம் - நம்பனைநல்

தலம்: திருக்கோளிலி

திருமுறை: 1-62-11

பண் : பழந்தக்கராகம்

தாளம் : ரூபகம்

திருச்சிற்றம்பலம்

நம்பனைநல் லடியார்கள் நாமுடைமா டென்றிருக்கும்
கொம்பனையாள் பாகனெழிற் கோளிலியெம் பெருமானை
வம்பமருந் தண்காழிச் சம்பந்தன் வண்டமிழ்கொண்
டின்பமர வல்லார்கள் எய்துவர்க ளீசனையே.

திருச்சிற்றம்பலம்

## 2.5 திருஞானசம்பந்தர் தேவாரம் - வாசி

தலம்: திருவீழிமிழலை

திருமுறை: 1-92-1

பண் : குறிஞ்சி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏசல் இல்லையே. 01

திருச்சிற்றம்பலம்

## 2.6 திருஞானசம்பந்தர் தேவாரம் - காழி

தலம்: திருவீழிமிழலை

திருமுறை: 1-92-11

பண் : குறிஞ்சி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

காழி மாநகர் வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல் தாழும் மொழிகளே. 11

திருச்சிற்றம்பலம்

## 2.7 திருஞானசம்பந்தர் தேவாரம் - அவ்வினைக்கு

தலம்: திருச்செங்கோடு

திருமுறை: 1-116-1

பண் : வியாழக்குறிஞ்சி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம். 01

திருச்சிற்றம்பலம்

## 2.8 திருஞானசம்பந்தர் தேவாரம் - பிறந்த

தலம்: திருச்செங்கோடு

திருமுறை: 1-116-11

பண் : வியாழக்குறிஞ்சி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

பிறந்த பிறவியில் பேணியெம் செல்வன் கழலடைவான்

இறந்த பிறவி உண்டாகில் இமையவர் கோனடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

## 2.9 திருஞானசம்பந்தர் தேவாரம் - கண்காட்டு

தலம்: திருவெண்காடு

திருமுறை: 2-48-1

பண் : சீகாமரம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

கண்காட்டு நுதலானும் கனல்காட்டும் கையானும்
பெண்காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே.

திருச்சிற்றம்பலம்

## 2.10 திருஞானசம்பந்தர் தேவாரம் - தண்பொழில்சூழ்

தலம்: திருவெண்காடு

திருமுறை: 2-48-11

பண் : சீகாமரம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் தமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலிவெண் பிறைச்சென்னி விகிர்தனுறை வெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத்து இவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய் வான்பொலியப் புகுவாரே. 11

திருச்சிற்றம்பலம்

## 2.11 திருஞானசம்பந்தர் தேவாரம் - வேயுறு

தலம்: திருமறைக்காடு

திருமுறை: 2-85-1

பண் : பியந்தைக் காந்தாரம்

தாளம்: திரிபுடை

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்

மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 01

திருச்சிற்றம்பலம்

## 2.12 **திருஞானசம்பந்தர் தேவாரம் -** தேனமர்

தலம்: திருமறைக்காடு

திருமுறை: 2-85-11

பண் : பியந்தைக் காந்தாரம்

தாளம்: திரிபுடை

திருச்சிற்றம்பலம்

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

## 2.13 **திருஞானசம்பந்தர் தேவாரம் -** காதலாகி

தலம்: திருநல்லூர் பெருமணம்

திருமுறை: 3-49-1

பண் : கௌசிகம்

தாளம்: ஆதி

நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. 01

திருச்சிற்றம்பலம்

## 2.14 திருஞானசம்பந்தர் தேவாரம் - நந்தி

தலம்: திருநல்லூர் பெருமணம்

திருமுறை: 3-49-11

பண் : கௌசிகம்

தாளம்: ஆதி

நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்தவல்லார் எலாம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே. 11

திருச்சிற்றம்பலம்

## 2.15 திருஞானசம்பந்தர் தேவாரம் - மங்கை

தலம்: திருஆலவாய்

திருமுறை: 3-120-1

பண் : புறநீர்மை

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால் வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த ஆலவா யாவது மிதுவே.1

திருச்சிற்றம்பலம்

## 2.16 திருஞானசம்பந்தர் தேவாரம் - பன்னலம்

தலம்: திருஆலவாய்

திருமுறை: 3-120-11

பண் : புறநீர்மை

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

பன்னலம் புணரும் பாண்டிமாதேவி குலச்சிறை யெனுமிவர் பணியும்
அந்நலம் பெறுசீ ராலவா யீசன் றிருவடி யாங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுண் ஞான சம்பந்தன் செந்தமி ழிவைகொண்

டின்னலம் பாட வல்லவ ரிமையோ ரேத்தவீற் றிருப்பவ ரினிதே.

திருச்சிற்றம்பலம்

## 2.17 திருநாவுக்கரசர் தேவாரம் - கரவாடும்

தலம்: திருக்கச்சியேகம்பம்

திருமுறை: 4-7-1

பண் : காந்தாரம்

தாளம்: ஜம்பை

திருச்சிற்றம்பலம்

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ வங்கையினி லனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே.

திருச்சிற்றம்பலம்

## 2.18 திருநாவுக்கரசர் தேவாரம் - அடுத்தானை

தலம்: திருக்கச்சியேகம்பம்

திருமுறை: 4-7-10

பண் : காந்தாரம்

தாளம்: ஜம்பை

திருச்சிற்றம்பலம்

அடுத்தானை யுரித்தானை யருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை யென்மனத்தே வைத்தேனே.

திருச்சிற்றம்பலம்

## 2.19 திருநாவுக்கரசர் தேவாரம் - ஒன்றுகொலாம்

தலம்: பொது

திருமுறை: 4-18-1

பண் : இந்தளம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

ஒன்றுகொலாம் அவர் சிந்தை உயர்வரை
ஒன்றுகொலாம் உயரும் மதி சூடுவர்

ஒன்றுகொலாம் இடு வெண்டலை கையது
ஒன்றுகொலாம் அவர் ஊர்வது தானே. 01

திருச்சிற்றம்பலம்

## 2.20 திருநாவுக்கரசர் தேவாரம் - பத்துக்கொலாம்

தலம்: பொது

திருமுறை: 4-18-10

பண் : இந்தளம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

பத்துக்கொலாம் அவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொலாம் எயிறுந் நெரிந் துக்கன
பத்துக்கொலாம் அவர் காயப்பட்டான் தலை
பத்துக்கொலாம் அடியார் செய்கை தானே. 10

திருச்சிற்றம்பலம்

## 2.21 திருநாவுக்கரசர் தேவாரம் - பத்தனாய்

தலம்: கோயில்

திருமுறை: 4-23-1

ராகம்:

தாளம்:

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினாற் பத்திசெய்கேன் என்னைநீ இகழ வேண்டா
முத்தனே முதல்வா தில்லை அம்பலத்து ஆடுகின்ற
அத்தாவுன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே. 01

திருச்சிற்றம்பலம்

## 2.22 திருநாவுக்கரசர் தேவாரம் - பத்துக்கொலாம்

தலம்: கோயில்

திருமுறை: 4-23-10

ராகம்:

தாளம்:

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

மண்ணுண்ட மாலவனும் மலர்மிசை மன்னி னானும்
விண்ணுண்ட திருவுருவம் விரும்பினார் காண மாட்டார்
திண்ணுண்ட திருவே மிக்க தில்லைச் சிற்றம்பலத்தே
பண்ணுண்ட பாடலோடும் பரமநீ ஆடு மாறே. 10

திருச்சிற்றம்பலம்

## 2.23 **சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** தலைக்குத்தலை

தலம்: திருவஞ்சைக்களம்

திருமுறை: 7-4-1

பண்: இந்தளம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

தலைக்குத்தலை மாலை அணிந்ததென்னே
சடைமேற்கங்கை வெள்ளந் தரித்ததென்னே
அலைக்கும்புலித் தோல்கொண் டசைத்ததென்னே
அதன்மேற்கத நாகங்கச் சார்த்ததென்னே
மலைக்குந்நிக ரொப்பன வன்றிரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்
டலைக்குங்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே.

திருச்சிற்றம்பலம்

## 2.24 **சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** எந்தம்

தலம்: திருவஞ்சைக்களம்

திருமுறை: 7-4-10

பண்: இந்தளம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

எந்தம்மடி களிமை யோர்பெருமான்
எனக்கென்றும் அளிக்கும் மணிமிடற்றன்
அந்தண்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனை
மந்தம்முழ வுங்குழ லும்மியம்பும்
வளர்நாவலர் கோன்நம்பி ஊரன்சொன்ன
சந்தம்மிகு தண்டமிழ் மாலைகள்கொண்
டடிவீழவல் லார்தடு மாற்றிலரே.

திருச்சிற்றம்பலம்

## 2.25 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - முத்தா

தலம்: திருவாலங்காடு

திருமுறை: 7-52-1

பண்: பழம்பஞ்சுரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழைய னூர்மேய
அத்தா ஆலங் காடாஉன் னடியார்க் கடியேன் ஆவேனே.

திருச்சிற்றம்பலம்

## 2.26 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - எந்தம்

தலம்: திருவாலங்காடு

திருமுறை: 7-52-10

பண்: பழம்பஞ்சுரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

பத்தர் சித்தர் பலர்ஏத்தும் பரமன் பழைய னூர்மேய
அத்தன் ஆலங் காடன்றன் அடிமைத் திறமே அன்பாகிச்
சித்தர் சித்தம் வைத்தபுகழ்ச் சிறுவன் ஊரன் ஒண்டமிழ்கள்
பத்தும் பாடி ஆடுவார் பரமன் னடியே பணிவாரே.

திருச்சிற்றம்பலம்

## 2.27 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - பரவும்

தலம்: திருவையாறு

திருமுறை: 7-77-1

பண்: காந்தார பஞ்சமம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

பரவும் பரிசொன் றறியேன்நான்
　பண்டே உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும்
　எய்த நினைய மாட்டேன்நான்

கரவில் அருவி கமுகுண்ணத்
   தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக்கோட்டத்
   தையா றுடைய அடிகேளோ 1

திருச்சிற்றம்பலம்

## 2.28 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - எந்தம்

தலம்: திருவையாறு

திருமுறை: 7-77-11

பண்: காந்தார பஞ்சமம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

கூடி அடியார் இருந்தாலும்
   குணமொன் றில்லீர் குறிப்பில்லீர்
ஊடி இருந்தும் உணர்கிலேன்
   உம்மைத் தொண்டன் ஊரனேன்
தேடி எங்குங் காண்கிலேன்
   திருவா ரூரே சிந்திப்பன்
ஆடுந் திரைக்கா விரிக்கோட்டத்
   தையா றுடைய அடிகேளோ 11

திருச்சிற்றம்பலம்

## 2.29 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - வளைந்தது

தலம்: கோயில்

திருமுறை: 8-14-1

ராகம்: மோகனம்

தாளம்: ஆதி

திருவுந்தியார்

திருச்சிற்றம்பலம்

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
   ஒருங்குடன் வெந்தவாறு உந்தீபற. 01

திருச்சிற்றம்பலம்

## 2.30 மாணிக்கவாசர் அருளிய திருவாசகம்- ஏகாசம்

தலம்: கோயில்

திருமுறை: 8-14-20

ராகம்: மோகனம்

தாளம்: ஆதி

திருவுந்தியார்

திருச்சிற்றம்பலம்

ஏகாசம் இட்ட இருடிகள் போகாமல்
ஆகாசம் காவலென்று உந்தீபற
அதற்கப்பாலும் காவலென்று உந்தீபற. 20

திருச்சிற்றம்பலம்

## 2.31 திருமாளிகைத் தேவர் அருளிய திருவிசைப்பா - பத்தியாய்

தலம்: திருவாரூர்

திருமுறை: 9-18-1

இராகம் ஆனந்த பைரவி

தாளம் ஆதி

திருச்சிற்றம்பலம்

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடங்குலா வினரே.

திருச்சிற்றம்பலம்

## 2.32 சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு - குழலொலி

தலம்: கோயில்

திருமுறை: 9-29-11

இராகம்: ஆனந்த பைரவி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி

மிகு திருவாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி ஆளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 11
திருச்சிற்றம்பலம்

## 2.33 திருமுல நாயனார் அருளிய திருமந்திரம் - நாடும்

திருமுறை: 10-5-5-3

இராகம்:

தாளம்:

திருச்சிற்றம்பலம்
நாடும் நகர மும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே. 03
திருச்சிற்றம்பலம்

## 2.34 காரைக்கால் அம்மையார் அருளியது - பிறந்து

திருமுறை: 11-4-1

இராகம்:

தாளம்:

அறிபுதத் அந்தாதி

திருச்சிற்றம்பலம்
பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பது இடர். 01
திருச்சிற்றம்பலம்

## 2.35 சேக்கிழார் அருளிய பெரியபுராணம் - திருநாவுக்கரசு

திருமுறை: 12-21-1

ராகம்: மத்தியமாவதி

தாளம்:

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவல் உறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக்கு உரைசெய்ய ஒண்ணாமை உணராதேன். 001

திருச்சிற்றம்பலம்

### 2.36 சேக்கிழார் அருளிய பெரியபுராணம் - ஐந்து

திருமுறை: 12-5-252

ராகம்: மத்தியமாவதி

தாளம்:

திருச்சிற்றம்பலம்

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

# 3. திருமுறைப் பதிகங்கள்

### 3.01 திருஞானசம்பந்தர் தேவாரம் – மறையுடையாய்

தலம்: திருநெடுங்களம்

திருமுறை: 1-52

பண் : பழந்தக்கராகம்

தாளம் : ரூபகம்

இடர்களையும் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மறையுடையாய் தோலுடையாய் வார்சடை மேல்வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே என்றுனைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. 01

கனைத்தெழுந்த வெண்டிரைசூழ் கடலிடை ந ஞ்சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்திய தேவநின்னை
மனத்தகத்தோர் பாடலாடல் பேணி இராப்பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. 02

நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியான் உயிரைவவ்வேல் என்றடல் கூற்றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர்சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. 03

மலைபுரிந்த மன்னவன்தன் மகளையோர் பால்மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கும் அவிர்சடை ஆரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின் தாள்நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. 04

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடுந் தலைவநின் தாள்நிழற்கீழ்
நீங்கிநில்லார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. 05

விருத்தனாகிப் பாலனாகி வேதமோர் நான்குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடை மேற்கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்தர்கீதர் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. 06

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக் கூட்டியோர் வெங்கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென்று எம்பெருமான் அணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. 07
குன்றினுச்சி மேல்விளங்கும் கொடிமதில் சூழிலங்கை
அன்றிநின்ற அரக்கர்கோனை அருவரைக் கீழடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியால் ஏத்தி இராப்பகலும்
நின்றுநைவார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. 08

வேழவெண்கொம்பு ஒசித்தமாலும் விளங்கிய நான்முகனும்

சூழவெங்கும் நேடவாங்கோர் சோதியு ளாகிநின்றாய்
கேழல்வெண்கொம்பு அணிந்தபெம்மான் கேடிலாப் பொன்னடியின்
நீழல்வாழ்வார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. 09

வெஞ்சொல் தஞ்சொல்லாக்கிநின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந் தத்துவம் ஒன்றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திர நின்னடியே
நெஞ்சில்வைப்பார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே. 10

நீடவல்ல வார்சடையான் மேய நெடுங்களத்தைச்
சேடர்வாழும் மாமறுகில் சிரபுரக் கோன்நலத்தால்
நாடவல்ல பனுவல்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே. 11

திருச்சிற்றம்பலம்

## 3.02 திருஞானசம்பந்தர் தேவாரம் - துஞ்சலும்

தலம்: பொது

திருமுறை: 3-22

பண்: காந்தார பஞ்சமம்

தாளம்: ஆதி

திருப்பஞ்சாக்கரத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செ ழுத்துமே. 01

மந்திர நான்மறை ஆகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. 02

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்து

ஏனை வழிதிறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே. 03

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச் சிவமுத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே. 04

கொங்கலர் வன்மதன் வாளி ஐந்தகத்து
அங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கரவின் படம் அஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே. 05

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்செ ழுத்துமே. 06

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்செ ழுத்துமே. 07

வண்டமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே. 08

கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன அஞ்செ ழுத்துமே. 09

புத்தர் சமண் கழுக்கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின

வித்தக நீறணிவார் வினைப் பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செ ழுத்துமே. 10

நற்றமிழ் ஞான சம்பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலை ஈரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே. 11

திருச்சிற்றம்பலம்

## 3.03 திருநாவுக்கரசர் தேவாரம் - கூற்றாயின

தலம்: திருவதிகைவீரட்டானம்

திருமுறை: 4-1

பண் : கொல்லி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 01

நெஞ்சம் உமக்கே இடமாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்மிது ஒப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 02

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்

படுவெண்டலையில் பலி கொண்டுழல்வீர்
துணிந்தே உமக்காட்செய்து வாழலுற்றால்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றமேற்றுகந்தீர் சுற்றும் வெண்டலைகொண்டு
அணிந்தீர் அடிகேள் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 03

முன்னம் அடியேன் அறியாமையினால்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை அடியேன் உமக்காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந்தார் வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்ன நடையார் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 04

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்
வார்த்தையிது ஒப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார் புனலார் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 05

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 06

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்

ஒ ருவர்தலை காவல் இலாமையினால்
வயந்தே உமக்காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின் அகம்படியே
பறித்துப் புரட்டி அறுத்தீர்த்திடநான்
அயர்ந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டா னாத்துறை அம்மானே. 07

வலித்தேன்மனை வாழ்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மன மொன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தேயென் வயிற்றின் அகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 08

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலைபிணி என்றிவற்றை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
என்போலிகள் உம்மை இனித்தெளியார்
அடியார்படு வதிது வேயாகில்

அன்பே அமையும் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 09

போர்த்தாய் அங்கோரானையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தான் அரக்கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த அதுகருதாய்
வேர்த்தும்புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல்சூழ் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே. 10

திருச்சிற்றம்பலம்

## 3.04 சுந்தரர் தேவாரம் - பித்தா

தலம்: திருவெண்ணெய்நல்லூர்

திருமுறை: 7-1

பண் : இந்தளம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

பித்தா பிறைசூடீ பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக்கு ஆளாயினி அல்லேன்எனலாமே. 01

நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாய்த் திரிந்தெய்த்தேன் பெறலாகா அருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆயா உனக்கு ஆளாயினி அல்லேன்எனலாமே. 02

மன்னே மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னைப்
பொன்னே மணிதானே வயிரம்மே பொருதுந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அன்னே உனக்கு ஆளாயினி அல்லேன்எனலாமே. 03

முடியேன் இனிப்பிறவேன் பெறின்மூவேன் பெற்றம்ஊர்தீ
கொடியேன் பலபொய்யே உரைப்பேனைக் குறிக்கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அடிகேள் உனக்கு ஆளாயினி அல்லேன்எனலாமே. 04

பாதம் பணிவார்கள் பெறும்பண்டம் அதுபணியாய்
ஆதன் பொருளானேன் அறிவில்லேன் அருளாளா
தாதார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்

ஆதீ உனக்கு ஆளாயினி அல்லேன்எனலாமே. 05
தண்ணார் மதிசூடீ தழல்போலுந் திருமேனீ
எண்ணார்புரம் மூன்றும் எரியுண்ண நகைசெய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
அண்ணா உனக்கு ஆளாயினி அல்லேன்எனலாமே. 06

ஊனாய் உயிரானாய் உடலானாய் உலகானாய்
வானாய் நிலனானாய் கடலானாய் மலையானாய்
தேனார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆனாய் உனக்கு ஆளாயினி அல்லேன்எனலாமே. 07

ஏற்றார் புரம்மூன்றும் எரியுண்ணச் சிலைதொட்டாய்
தேற்றாதன சொல்லித் திரிவேனோ செக்கர்வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆற்றாய் உனக்கு ஆளாயினி அல்லேன்எனலாமே. 08

மழுவாள் வலன்ஏந்தீ மறைஓதீ மங்கைபங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தல் உனதொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள் அழகா
உனக்கு ஆளாயினி அல்லேன்எனலாமே. 09

காரூர்புனல் எய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர் புகழெய்தித்திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருட்டுறையுள்
ஆரூரனெம் பெருமாற்கு ஆள் அல்லேன்எனலாமே. 10

திருச்சிற்றம்பலம்

## 3.05 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - திருவெம்பாவை

தலம்: திருவண்ணாமலை

திருமுறை: 8-7

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக்கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் ரெம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போ(து) இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி

ஏசும் இடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
  கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
  ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
  அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
  பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் ஆட்கொண்டாற் பொல்லாதோ
  எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
  இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் ரெம்பாவாய் 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
  வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
  கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
  கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டொம் நீயேவந்து
  எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
  போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
  ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
  சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
  ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
  நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
  வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
  வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
  ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
  உன்னற்கு அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்

தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகுஒப்பாய்
என்னானை என்அரையன் இன்னமுதுஎன்று எல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்குஎங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கேபாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கு எம்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்று அல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன் தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆர்உற்றார் ஆர்அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலா ரெம்பாவாய். 10

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துஉன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண் ஆர் அழல்போற்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்த்தொழிந் தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்துஆடும்
தீர்த்தன் நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்

கூத்தன்இவ்வானும் குவலயமும் எல்லாமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணி குழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலம்கழுவு வார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்துஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கப் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல்ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதித்திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்துஎடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய் ஓவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்துஒருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துஉடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி யவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள் பால்

எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் ரெம்பாவாய்.17

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமயங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகித்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோ எம்பாவாய்.18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய். 19

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்

# 4. வாழ்த்துப் பாடல்கள்

## 4.1 வாழ்த்து - ஆறிருதடந்தோள்

ராகம்: மத்தியமாவதி

தாளம் ஆதி

திருச்சிற்றம்பலம்

ஆறிருதடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## 4.2 வாழ்த்து - வான்முகில்

ராகம்: மத்தியமாவதி

தாளம் ஆதி

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

# 5. உரைநடை

## 5.1 சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற சைவ சமயத்துக்கு அடிப்படையாகச் சைவ சித்தாந்தம் என்னும் தத்துவப் பிரிவு விளங்குகிறது. சிந்தித்துக் கண்டறிந்த முடிவான உண்மையே சித்தாந்தம் எனப்பொருள்படும். (அந்தம் - முடிவு). ஆன்மீகம் தொடர்பான பல்வேறு கருத்துக்களையும் ஆராய்ந்து சிந்தித்து முடிந்த முடிவாகக் காணப்பட்டது சைவசித்தாந்தம்.

தத்துவ அடிப்படைகள்

பதி (இறைவன்)
பசு (உயிர்)
பாசம் (ம லங்கள்)

ஆகிய மூன்றையும் என்றென்றும் உள்ள நிலைத்த பொருள்களாக ஏற்றுக்கொள்வது சைவ சித்தாந்த தத்துவத்தின் அடிப்படையாகும். சைவ சித்தாந்தத்தின்படி இம் மூன்றுமே முதலும் முடிவும் இல்லாதவை. இதனால் இவை மூன்றையுமே யாரும் படைத்ததில்லை என்கிறது சைவ சித்தாந்தம். ஆயினும், என்றும் நிலைத்திருக்கும் இம் மூன்றும் வெவ்வேறு இயல்புகளைக் கொண்டவை எனக்கூறும் இத் தத்துவம் இவை பற்றிப் பின்வருமாறு விளக்குகின்றது.

இதில் காட்சி அளவையின் மூலம் உயிர்கள் உள் பொருள் என்பது உணரப்படுகிறது. ஓரறிவு முதலாக ஆறறிவு வரை உள்ள உயிர்கள் அனைத்தும் கண்ணால் காணப் பெறுபவையாகும். இந்த உயிர்கள் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன. அவ்வாறு அனுபவிக்கின்ற பொழுது எல்லா உயிர்களும் ஒரே மாதிரியான இன்ப துன்பங்களை அனுபவிப்பதில்லை. எடுத்துக்காட்டாக ஒரு குடும்பத்தில் ஒரு பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகள் அனைவரும் ஒரே உயரமோ, ஒரே குணமோ, ஒரே நிறமோ, ஒரே அறிவோ பெற்று விளங்குவதில்லை. வெவ்வேறான குணங்களோடு, வெவ்வேறான நிறத்தோடு, அறிவு நிலையில் ஏற்றத் தாழ்வோடு விளங்குகின்றார்கள். இவ்வாறு விளங்குவதற்குக் காரணம் அவர்கள் முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகள்தான் என்பதை அனுமான அளவையால் உணர்கின்றோம்.

இவ்வாறு இரு வினைகளுக்கு ஏற்ப உயிர்களை அனுபவிக்கச் செய்பவன் இறைவன் என்று இறைவனை அனுபவித்துக் கண்டறிந்த ஞானிகளின் கூற்றுகள் உரையளவையாகத் தருகின்றன. இத்தகைய அளவைகள் மூலம் இறை, உயிர், பாசம்

ஆகிய முப்பொருள்களின் தத்துவங்கள் சைவ சித்தாந்தத்தில் விளக்கப் படுகின்றன.

இறைவன்: அறிவு வடிவாகவே இருக்கும் இறைவன் எல்லாம் அறிந்தவன், எங்கும் நிறைந்திருப்பவன், அளவற்ற வல்லமை பெற்றவன்.

உயிர்: உயிர்கள் இயல்பாகவே அறிவுள்ளவை ஆனால் மலங்களினால் பிணிக்கப்படும்போது அவற்றின் அறிவு மறைக்கப்படுகின்றது. ம லங்களின் பிணிப்பிலிருந்து தாங்களாகவே விடுபடுவதற்கு உயிர்களால் முடியாது. இறைவன் துணையுடனேயே மலங்களின் பிணைப்பிலிருந்து உயிர்கள் விடுபட முடியும்.

மலங்கள்: மலங்கள் சடப்பொருள்கள். அறிவற்றவை. உயிர்களைப் பிணித்து அவற்றின் அறிவை மறைக்கும் வல்லமை கொண்டவை. இவை இறைவனை அடைய முடியாது.

## 5.2 திருநீறு

திருநீறு: “ நீறில்லா நெற்றி பாழ்” , “ திருவெண்ணீறு அணியாத திருவிலூரும் ...ஊரல்ல” எனும் மொழிகள் திருநீற்றின் சிறப்பினை உணர்த்தும். “ மந்திரமாவது நீறு” எனும் மொழிகள் திருநீற்றின் சிறப்பினை உணர்த்தும். சைவ தீட்சை பெற்றவர்களே திருநீற்றைக் குழைத்துப் பூசவேண்டும் எனவும் ஏனையோர் திருநீற்றை உள்தூளனமாகப் பூசவேண்டும் என்றும் கூறப்படுகின்றது.

“ வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால் அம்மாநாம் அஞ்சுமாறே” என்பார் மணிவாசகர்.

திருநீறு அணியும் முறைப்பற்றிக் கூறவந்த நாவுக்கரசர் “ திருவாய்ப் பொலியச் சிவாயநம என்று நீறணிந்தேன்” என்று கூறியுள்ளார். திருநீறளிக்கும் பயன்களை கூறவந்த திருமூலர்

*கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை*
*மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்*
*தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி*
*சிங்கார மான திருவடி சேர்வரே*

என்று குறிப்பிட்டுள்ளார்.

இராமலிங்க அடிகள்,

*பாடற்கினிய வாக்களிக்கும் பாலும்சோறும் பகிர்ந்தளிக்கும்*

*கூடற்கினிய அடியவர்தம் கூட்டம் அளிக்கும் குணமளிக்கும்*
*ஆடற்கினிய நெஞ்சே நீ அஞ்சேல் என்மேல் ஆணை கண்டாய்*
*தேடற்கினிய திருவளிக்கும் சிவாயநம என்றிடு நீறே*

என்று திருநீற்றின் சிறப்புகளை எடுத்துரைத்துள்ளார்.

திருநீற்றின் வேறு பெயர்கள் கீழ்வருமாறு

1. விபூதி: "வி" என்றால் மேலான, " பூதி" என்றால் ஐஸ்வர்யம். மேலான ஐய்வர்யத்தை (முக்திபேறு) தருதலால் இது விபூதி எனப்பட்டது.
2. பசிதம்: அறியாமையாகிய ஆணவத்தினை அழித்துச் சிவஞானமாகிய சிவதத்துவத்தினை விளக்குவதால் இதனைப் பசிதம் என்பர் சான்றோர்.

3. இரட்சை: ஆன்மாக்களாகிய பசுக்களைத் துன்பத்திலிருந்து நீக்கிக் காத்து ரட்சிப்பதால் இது இரட்சை எனப்படுகின்றது.

4. சாரம்: உயிர்களின் மலத்தினைத் தழுவி விடுதலால் இது சாரம் என்றழைக்கப்படுகின்றது.

5. பஸ்பம்: சகல பாபங்களையும் நீக்கவல்லதாக இது இருப்பதால் இதனைப் பஸ்பம் என்றும் அழைப்பார்கள் அருளாளர்கள்.

பேரூர் புராணம் இதனை கீழ்கண்டவாறு விளக்கும்.

*நீடலுறுந்தீ வினையனைத்தும் நீற்றி விடலால் நீறென்றும்*
*வீடில் வெறுக்கை தருதலினால் விபூதி யென்றும் உயிர்தோறும்*
*கூடுமலமா சினைக்கழுவுங் குணத்தால் சாரம் என்றும் மடம்*
*ஓடவளர் சோதியைத் தரலால் பசிதம் என்றும் உரைப்பாரால்*
நீறிடாத நெற்றி பாழ் என்க

இதனை ஔவை பிராட்டியார் நீறில்லா நெற்றி பாழ், நெய்யில்லா உண்டி பாழ் என்று பேசுகின்றார்.

விபூதியானது பூசிக் கொள்ளுவதற்கு மட்டுமல்ல, மருந்தாகவும் பயன்படுகின்றது.

வடலூர் இராமலிங்க வள்ளல்பெருமான் இதுபற்றிக் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*அருள்செய் நீறிடார் அமுதுனக் கிடினும்*
*அம்மலத் தினை அருந்துதல் ஒழிக*
*தெருள்கொள் நீறிடும் செல்வர் கூழிடினும்*
*சேர்ந்து வாழ்த்தியத் திருவமுதுண்க.*

அனைத்து ஆன்மாக்களுக்கும் அருள்புரிவது திருநீறு. அதனைப் பூசாதவர்கள் அமிழ்தமே அளித்தாலும் அதனை மலமென எண்ணி உண்ணாது ஒதுக்கிடல் வேண்டும். நீறிட்ட நெற்றி கொண்டார், கூழினை குடிக்க கொடுத்தாலும் அதனை வாழ்த்தி உட்கொளல் வேண்டும்.

*முத்திநீறிடார் முன்கையால் தொடினும்*
*முள்ளுறுத்தல் போல் முனிவுடன் நடுங்க*
*பத்தி நீறிடிம் பத்தர்கள் காலால்*
*பாய்ந்துதைக்கினும் பரிந்ததை மகிழ்க*

முத்திப் பேற்றினை அளிக்கக் கூடிய நீற்றினை நெற்றியில் இட்டு கொள்ளாதவர் முன்கையால் நம்மைத் தொட்டால் முள்ளொன்று உறுத்துவதுபோல் உணர்ந்து நடுங்கி ஒதுக்கிடல் வேண்டும்.

பக்தியுடன் திருநீறு இட்டுக்கொண்ட பத்தர்கள் காலால் எட்டி உதைத்தாலும் அதனைப் பரிவுடன் ஏற்றுக்கொண்டு மகிழ வேண்டும் என்கிறார் வள்ளலார்

திருஞானசம்பந்த பெருமான் அருளிய திருநீற்றுப்பதிகம் கூறும் திருநீற்றின் பெருமைகளைப் பார்ப்போம்

*மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு*
*சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு*
*தந்திரமாவது நீறு சமயத்தில் லுள்ளது நீறு*
*செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே. 1*

சிறந்த பவளம் போன்ற வாயினை உடைய உமைபங்கன் ஆகிய திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானது திருநீறு,

1. மந்திரம் போல நினைத்ததை கொடுக்கும், நினைப்பவரைக் காப்பது.
2. சிவலோகத்தில் உள்ளவர், சிவமானவர், வானவர்தம் மேனியில் பூசிக்கொள்ளப்படுவது.
3. அழகு, சிவப்பொலிவு தருவது.

4. எல்லா நூல்களாலும் புகழப்படுவது.(இப்பதிகமே சான்று)

5. சிவ ஆகமங்களில் புகழ்ந்து சொல்லப்படுவது.

6. சிவ சமயத்தில் அழியாத பொருளாக நிலைத்துள்ளது.

*வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு*
*போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு*
*ஓதத் தகுவது நீறு உண்மையிலுள்ளது நீறு*
*சீதப் புனல் வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 2*

குளிர்ந்த நீர் நிரம்பிய வயல்கள் சூழ்ந்த திரு ஆலவாயிலில் விளங்கும் சிவபிரானது திருநீறு,

7. வேதங்களில் புகழ்ந்து ஓதப்படுவது

8. கொடிய கொடிய துயர், பிறவித்துயரம் முதலியவற்றைப் போக்குவது.

9. சிவ ஞானத்தை தருவது.

10. அறியாமை போன்ற புன்மைகளைப் போக்குவது.

11. புகழ்ந்து போற்றத்தக்கது, ஆசிரியர் மாணாக்கருக்கு ஓதத்தகும் அளவு பெருமை உடையது. ஓதும்போது அணியத் தகுவது.

12. உண்மையில் நிலைபெற்ற மெய்பொருளாக விளங்குவது.

*முத்தி தருவது நீறு முனிவரணிவது நீறு*
*சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு*
*பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு*
*சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 3*

திருஆலவாயான் திருநீறு,

13. வீடுபேறு அளிப்பது.

14. முநிவர்களால் அணிய பெறுவது.

15. நிலையாக எப்பொழுதும் உள்ளது.

16. சிவனடியார்களால் புகழப்படுவது.

17. பக்தியை விளைவிப்பது, திருவடிக்கு அன்பு செய்வது.

18. வாழ்த்துவதற்கு இனியது.

19. எண்வகை சித்திகளை தருவது.

*காண இனியது நீறு கவினைத்தருவது நீறு*
*பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு*

*மாணந்தகைவது நீறு மதியைத் தருவது நீறு*
*சேணந்தருவது நீறு திருவால வாயான் திருநீறே.* 4

திருஆலவாயான் திருநீறு,

20. கண்களுக்கு அழகாய் இருப்பது கருத்திற்கு இனிமையானது,
21. அணிவோர்க்கு சிவப்பொலிவை தருவது.
22. விரும்பி அணிபவர்களுக்குப் பெருமை கொடுப்பது.
23. இறப்பைத் தடுப்பது.
24. அறிவைத் தருவது, இயல்பான அறிவைத் தருவது.
25. உயர்வு அளிப்பது

*பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு*
*பேச வினியது நீறு பெருந்தவத்தோர்களுக் கெல்லாம்*
*ஆசைக்கெடுப்பது நீறு அந்தமதாவது நீறு*
*தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.* 5

திரு ஆலவாயான் திருநீறு,

26. பூசப்பூச இனிமையாக்குவது.
27. சிவபுண்ணியத்தை வளர்ப்பது.
28. பெருமையைப் பேசப்பேச இனிமை உண்டாக்குவது.
29. பெரிய தவத்தோர்களுக்கெல்லாம் பற்றை ஒழிப்பது.
30. முடிவான பேரின்பத்தைத் தருவது. அழகாகவும் இருப்பது.
31. தேசத்தோர்களால் புகழப்படுவது.

*அருத்த மதாவது நீறு அவலம் அறுப்பது நீறு*
*வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு*
*பொருத்தமதாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு*
*திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 6*

அழகிய மாளிகைகளால் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறு,

32. செல்வமாக இருப்பது
33. துன்பம் போக்குவது.
34. மனவருத்தத்தைத் தணிப்பது
35. சிவலோகம் அளிப்பது.
36. சிறப்பாகச் சைவசமயத்தார்க்கும், பொதுவாக எல்லா சமயத்தார்க்கும் பொருத்தமாயிருப்பது.

37. சிவபுண்ணியத்தை உடையவரும், பசுபுண்ணியத்தை உடையவரும் ஆகிய சைவர் பூசுவது.

*எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு*
*பயிலப்படுவது நீறு பாக்கியமாவது நீறு*
*துயிலைத்தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு*
*அயிலைப்பொலிதரு சூலத் தாலவாயான் திருநீறே 7*

கூர்மைக்கு விளக்கம் தருகின்ற சூலப்படையினை ஏந்திய திருஆலவாயான் திருநீறு,

38. திரிபுரங்களை எரிக்கச் செய்தது.

39. இம்மை மறுமை இன்பம் தர இருப்பது.

40. திருநீற்றை அணிந்து பழகினால்அன்றிப் பயனை எய்துவது அரிது.

41. செல்வமாக விளங்குவது.

42. சோம்பலைத் தடுப்பது,

43. துய்மையை அளிப்பது.

*இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு*
*பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு*
*தராவண மாவது நீறு தத்துவமாவது நீறு*
*அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே. 8*

பாம்புகள் வளைந்து தவழும் திருமேனியனாகிய திருஆலவாயான் திருநீறு,

44. இராவணன் பூசிப் பயன்பெற்றது.

45. நல்லவர்களால் எண்ணத்தக்கது. திருநீறு வீடுபேற்றுக்கு வழிவகுப்பதுநீறு. பாவத்தைப் போக்கவல்லது நீறு.

46. பராசக்தி சொரூபமானது நீறு.

47. தத்துவங்களாக மெய்பொருளாக விளங்குவது

*மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு*
*மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு*
*ஏலவுடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு*
*ஆலமது உண்டமிடற்று எம் ஆலவாயான் திருநீறே 9*

நஞ்சுண்டக் கண்டனாகிய திருஆலவாயான் திருநீறு,

48. திருமால் பிரமர்களால் அறியப் பெறாதது.

49. வானுலகில் வாழும் தேவர்களால் தங்கள் மேனிகளில் பூசிக்கொள்வது

50. உடம்பு இடர் தீர்க்கும், நிலையான இன்பம் தருவது.

*குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்*
*கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு*
*எண்டிசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு*
*அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆல வாயான் திருநீறே. 10*

மேல் உலகில் வாழ்வோர் பணிந்து போற்றும் திருஆலவாயான் திருநீறு,

51. கமண்டலத்தை ஏந்திய கையர்களாகிய சமணர்கள், சாக்கியர்களின் கண்களைத் திகைகச் செய்வது.

52. தியானிக்க இனியது.

53. எட்டு திசையிலும் பொருந்திய சிவமாகிய மெய்ப்பொருளை அடைந்தவரும், விரும்பினவரும், வழிபடுபவருமாகிய சைவர், அவர் ஏத்தும் தன்மையுடையது


*ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்*
*போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்*
*தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின் தீரச்*
*சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே 11*

ஆற்றலும், வலிமையும் உடைய விடையின்மீது ஏறிவரும் ஆலவாயான் திருநீற்றைப் போற்றி, புகலியில் விளங்கும் பூசுரனாகிய ஞானசம்பந்தன் சைவத்தின் பெருமையை தெளிவித்துப் பாண்டியனின் உடலில் பற்றிய தீமை விளைவித்த பிணி தீருமாறு சாற்றிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஒதவல்லார் நல்லவராவார்.
திருச்சிற்றம்பலம்

## 5.3 சிவாலய வழிபாடு

நம் ஆலயங்கள் நமது சமயம் மற்றும் கலாச்சார வளர்ச்சிக்கு முக்கிய தொடர்பை உண்டாக்கி தருகின்றன. ஆலயம் சென்று வழிபாடு செய்ய வேண்டும் என்ற முக்கியத்துவத்தை நமது ஞானிகளும் நமது முன்னோர்களும் மிகவும் வலியுறுத்தி உள்ளனர். ஆலயம் நமது இறைவன் வீற்றிருக்கும் இடம். நாம் இறைவனுடைய ஆற்றலை எளிய வழியில் பெறுவதற்காக ஆலய ங்களை (கோயில்கள்) நிர்மானித்து அவற்றில் கடவுள் சிலைகளைப் பதித்து அவற்றில் இறைவனுடைய ஆற்றலை (தெய்வீக சக்தியை) குவித்து வைத்திருக்கின்றோம்.

வானொலி அலைகள் (Radio waves) எங்கும் பரவி உள்ளது. ஆனால் நம்முடைய வெறும் செவியால் உணர முடியாது. அவ்வொலியை ஈர்க்கும் கருவியான ஒரு வானொலி (Receiving Set) தேவைப்படுகிறது. அதுபோல கடவுள் எங்கும் நிறைந்திருந்தாலும் ஆலயங்களில் (கோயில்களில்) சிறப்பாக இருந்து அருள் செய்கின்றார்.



**ஆலயம்** – - ஆ + லயம் -- ஆ – ஆன்மா; லயம்- என்பது லயிப்பது

(நமது **ஆன்மா லயிக்கும் இடம் ஆலயம்**)

**கோயில்** – கோ + இல் – - கோ – இறைவன் ; இல் – தங்கும் இடம்

( இறைவன் தங்கும் இடம்)

ஆகையால் இறை அருள் பெற ஆலயம் (கோயில்) செல்ல வேண்டும். ஆலய வழிபாட்டின் முக்கியத்தை மேல் கண்டவாறு உணர்ந்த நாம் , ஆலய வழிபாட்டின் முறையையும் அறிந்து வழிபடுவது சாலச்சிறந்த்து.ஆலயத்தின் பிரதான தெய்வம், ஆலயத்தின் அமைப்பு, பரிவார தெய்வங்களின் அமைப்பு முதலானவற்றாலும், பக்தர்களின் நிலைக்கு ஏற்பவும் மாறுதல்கள் இருக்கலாம் ஆனால் இங்குச் சில பொதுவான வழிபடும் முறை கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.


1. உடல் தூய்மை செய்து கொண்டு தூய்மையான ஆடைகளை அணிந்து ஆலயம் செல்ல வேண்டும்
2. திருநீறு, உருத்திராக்கம் முதலான சிவசின்னங்களை அணிந்துகொண்டு ஆலாயம் செல்லவேண்டும்
3. நம்மால் முடிந்த பூசைக்குரிய பொருட்களை ஆலயம் எடுத்துச் செல்ல வேண்டும் (பழம், தேங்காய், பூ, திருமஞ்சனம் (அபிஷேகம்) பொருட்கள்)
4. ஆலயத்திற்குள் நுழையும் முன்பு, முகம், கை, கால்களைக் கழுவிக் கொண்டு செல்லவேண்டும்.

5. ஆலயத்திற்குள் நுழையும் முன்பு கோபுரத்தின் முன் நின்று கைகளைக் கூப்பிக் கோபுரத்தை மேல் நோக்கிப் பார்த்து " தென்னாடுடைய சிவனே போற்றி. எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று கூறி வணங்கவேண்டும். சிவாயநம, நமச்சிவாய என்று மனத்திற்குள் 5 முறை உச்சரிக்க வேண்டும்.





6. திருநீறு அணியவேண்டும். (பல ஆலயங்களில் நுழைவாயில் அல்லது உட்பிரகாரத்திலே வைத்திருப்பார்கள்)
7. கொடிமரம் முன்பாகத் தரையில் விழுந்து (ஆண்கள் – அட்டாங்க வணக்கம், பெண்கள் – பஞ்சாங்க வணக்கம்) செலுத்த வேண்டும்



(நம் தலைப்புறம் வடதிசையிலும் கால்புறம் தென்திசையிலும் இருக்கலாம். குறிப்பாக நம் கால்புறம் மற்ற தெய்வங்களை நோக்கி இருக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

8. பலிபீடத்தில் நம்மிடம் உள்ள குற்றங்களையும் குறைகளையும் (பாவங்களையும்) பலிகொடுப்பதாகப் பாவித்து உள்ளே செல்லவேண்டும்
9. கொடி வணக்கம் செய்த பின்பு, நந்தி தேவரிடம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும் (மானசீகமாக வணங்கி அனுமதி பெருதல்)
10. விநாயகர் சன்னதிக்குச் சென்று விநாயகரை வணங்கவேண்டும் (தலையில் 3 முறை குட்டி தோப்புக்கரணம் இட்டு வழிபடவேண்டும்)



11. விநாயகரை வணங்கிவிட்டுப் பின்பு மூலஸ்தானம் (பிரதான தெய்வம்) சென்று வணங்க வேண்டும். (திருமுறைப் பாடல்களை மற்றவர்களுக்கு தொந்தரவு இடையூறு ஏற்படாதவகையில் மெல்லிய ஒலியுடன் ஒதலாம்.)
12. மூலஸ்தானம் இறைவரை / இறைவியை வணங்கிய பின்பு மற்ற பரிவார தெய்வங்களையும் வணங்க வேண்டும் (மற்ற பரிவார தெய்வகளை வணங்கும் பொழுது நமக்குத் தெரிந்த திருமுறை, திருபுகழ், அபிராமி பாடல்களையும் மெல்லிய ஒலியில் மனம் உருகப் பாடலாம்)

13. அர்ச்சகரிடம் திருநீற்றை வலது கரத்தில் பெற்று (கீழே இடது கை வைத்து) கீழே சிந்தாமல் நெற்றியில் சிவாயநம என்று சொல்லித் தலையை நிமிர்த்தி அணியவேண்டும். (திருநீறு கீழே சிந்தினால், துடைத்து விடவேண்டும்)
14. ஆலயத்தில் இருக்கும் நேரங்களில் நம் மனது சிவாயநம அல்லது ஓம் நமசிவாய அல்லது இறைவன், இறைவியின் பாடல்களை மெல்ல ஒலியில் பாடிக்கொண்டு மனதைக் கடவுளின் மேல் செலுத்த வேண்டும்
15. மற்ற தெய்வங்களை வணங்கிய பின்பு மூன்று முறை சன்னதியை வலம் வ ரலாம்.
16. மற்ற தெய்வங்களை வணங்கும் முன்பு 7 பிரதான கடவுளின் அமைப்பாகிய அம்பாள், நடராச பெருமான் , முருகப்பெரும்பானை வணங்க வேண்டும் பிறகு பிற தெய்வங்களை வணங்க வேண்டும்.



17. இறுதியாகச் சண்டேசுவர நாயனாரை அடைந்து வணங்கி மும்முறை மென்மையாக தட்டி அவர் நம்மைப் பார்பதாகக் கருதிச் சிவதரிசனப் பலனைத் தருமாறு வேண்டிக் கொள்ள வேண்டும்
18. சண்டேசுவர நாயனாரிடம் சிவதரிசன பலனைப் பெற்ற பிறகு கொடிமரத்தின் அருகில் மீண்டும் வணங்கி பின்பு வடக்கு முகமாக அமர்ந்து திருவைந்தெழுத்தை 108 முறை தியானத்தில் சிறப்பு
19. இறுதியாகப் பைரவரை வணங்கிச் சிவசொத்து எதையும் எடுத்து செல்லவில்லை என்று உறுதி கூறி ஆலயத்தை விட்டு வெளிவருதல் வேண்டும்
20. மீண்டும் கோபுர தரிசனம் செய்து வணங்கிய பின் வீட்டிற்குச் செல்லலாம்.

## ஆலயத்தில் செய்யக் கூடாதவை

1. துப்புதல், சிந்துதல், தலைவாருதல் கூடாது
2. தொப்பி, செருப்பு அணியக் கூடாது
3. மூலஸ்தானம் செல்லும்போது ஆண்கள் சட்டை அணியக் கூடாது.
4. வெற்றிலை பாக்கு போடுதல் கூடாது
5. சண்டையிடுதல் கூடாது
6. சத்தம் செய்தல் கூடாது
7. மலர்களை (நிர்மாலியத்தை) மிதித்தல் கூடாது

8. சிற்பத்திலோ மற்ற சுவாமிகளிலோ கை துடைக்கவோ, எழுத்தவோ கூடாது.
9. சந்நிதியை மறைக்கக் கூடாது. மற்றவர்கள் (உயரமானவர்கள்) வழிபாடு செய்ய இடையுறாக இருக்கக் கூடாது,
10. பூசைகள் மற்றும் ஆலய வழிபாடு நேரங்களில் வீண் பேச்சு பேசக் கூடாது
11. ஆலயத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்
12. பெண்கள் தலைவிரிகோலமாக இருக்கக்கூடாது
13. தொலைபேசியில் ஆலயத்தில் பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும்

## 5.4 உருத்திராக்கம்

பஞ்சாட்சர மந்திரங்களை உச்சரித்தல், திருநீறு தரித்தல், உருத்திராக்கம் அணிதல் இம்மூன்றையும் ஒருவன் ஒருசேரச் செய்வது: திரிவேணி சங்கமத்தில் நீராடுவதன் புண்ணியத்தைப் பெற்றுத்தரும்.

உருத்திராக்க மணிகளை எண்ணற்ற அளவில் உடலில் தரித்துக் கொள்பவன், மகேசனைப் போல அனைத்துத் தேவர்களாலும் தலை தாழ்ந்து வணங்கப்படுகிறான்.

ஒருவன் எவ்வகைப் பிறவி எடுத்திருந்தாலும் சரி, அவன் ருத்ராட்சத்தை அணிவானாகில், நரகங்களிலிருந்து விடுபடுகிறான்.

எவ்வகை ஆசாரத்தைக் கடைபிடிப்பவராயினும் சரி ; பெண்களாயினும் சரி; அவர்கள் ‘ ஓம்’ என்னும் பிரணவ மந்திரத்தை உச்சரித்து, ருத்ராட்சங்களை அணிந்து கொள்ளலாம்.

ருத்ராட்சத்தை ஒருவன்/ள் ஒரு பகலில் அணிந்திருப்பானாயின், அவன் இரவில் செய்த பாவங்களை அது எரித்துவிடும். இரவில் அணிந்திருப்பானாகில் அது அவன் பகலில் செய்த பாவங்களை எரித்துவிடுகிறது. ஆதலால் ஒருவன் எந்நேரமும் ருத்ராட்சங்களை அணிந்து கொண்டிருக்க வேண்டும் என்பது நம்பிக்கை.

ருத்ராட்சமும் திருநீறும் அணிந்தவன் ஒருபோதும் யமலோகம் செல்வதில்லை; ருத்ராட்சம் அணிந்து ஐத்தெழுத்து மந்திரம் உச்சரிப்பவன் எல்லாவித நோய்களிலிருந்தும் விடுபடுகிறான். அவனை அகால மரணமோ,துர்மரணமோ நெருங்குவதில்லை என்பதும் நம்பிக்கை.

**சில அபூர்வ தகவல்கள்:-**

உருத்திராட்ச மரத்தின் பழத்தில் இருந்து இந்த கொட்டைகளைப் பிரித்தெடுத்து கழுவி உலரவைத்து அவற்றின் அளவைப் பொறுத்துத் தனித் தனி பயன்பாட்டுக்கென பிரித்தெடுக்கின்றனர்.

இந்தக் கொட்டைகளின் அளவு தட்பவெப்ப நிலை, மரத்தின்வகை, வயது மற்றும் பழத்தின் முதிர்ச்சியைப் பொறுத்து மாறுபடுகிறது.

பொதுவில் பார்ப்பதற்கு மங்கலாய் கருமை அல்லது செம்மையேறிய பழுப்பு நிறத்தில் உருத்திராட்ச மணிகள் காணப்படுகின்றன.

உருத்திராட்ச மணியின் வெளிப்புற  பரப்பானது ஒழுங்கற்ற ஆனால் உறுதியான மேடு பள்ளங்களுடனும், பிளவுகளுடனும் காணப் படுகிறது.

இந்த கொட்டைகளை உற்று கவனித்தால் மேலிருந்து கீழாக அழுத்தமான கோடு போன்ற பிளவுகள் இருக்கும்.

இந்த பிளவுகளையே முகங்கள் என்கின்றனர்.

இந்த உருத்திராட்ச மணிகளின் வளர்ச்சி மற்றும் திரட்சியைப் பொறுத்து இவற்றில் பிளவுகள் அல்லது முகங்கள் அமைகின்றன.

ஒரு முகத்தில் இருந்து 21 முகம் வரையிலான உருத்திராட்ச மணிகள் கிடைக்கின்றன.

பொதுவில் 95 விழுக்காடு காய்கள் ஐந்து அல்லது ஆறு முகம் கொண்டவைகளாகவே இருக்கின்றன.

இந்த காய்களில் உள்ள முகங்களின் அழுத்தம் மற்றும் இடைவெளியைப் பொறுத்தே இந்த உருத்திராட்ச மணிகளின் எடை அமைகிறது.

நெருக்கமான இடைவெளியை உடைய காய்கள் பாரமானதாகவும், அகன்ற ஆழமான இடைவெளியுள்ள காய்கள் பாரம் இல்லாமல் லேசானதாகவும் இருக்கும்.

இத்தகைய காய்கள் மட்டும் நீரில் மிதக்கும்.

மிக அபூர்வமாய் இரண்டு காய்கள் ஒன்றோடு ஒன்று இனைந்தது முகங்கள் ஏதும் இல்லதது போலிருக்குமாம்.

இந்த வகை மணிகளை “ கவுரி சங்கர்” என்கின்றனர்.

ஒரு முகம் மட்டும் அமைந்துள்ள காய்கள் தோற்றத்தில் முழுமையாக விளைச்சலை அடையாத காய்களைப் போலிருக்கும்.

ஏகமுகம், இரண்டு முகம், மூன்று முகமுடைய உருத்திராட்ச மணிகளும் அபூர்வமானதாகவும், சக்தி உடையவனாகவும் கருதப் படுகிறது.

இந்தக் கருத்தாக்கங்கள் யாவும் நம்பிக்கையின் பாற்பட்டதே. உருத்திராட்ச காய்களின் அளவை வைத்து மூன்று தரமாகப் பிரிக்கின்றனர்.

நெல்லிக்காய் அளவு உருத்திராட்சம், இலந்தைப் பழ அளவு உருத்திராட்சம், கடலை அளவு உருத்திராட்சம் என மூன்றாக பொதுமைப் படுத்தப் பட்டிருக்கிறது.

நெல்லிக்காய் அளவுள்ள உருத்திராட்சங்கள் பூரண பலனையும், இலந்தைப் பழ அளவிலான காய்கள் மத்திம பலனையும், கடலை அளவுள்ளவை அதம பலனையும் தருமென கூறப் பட்டிருக்கிறது.

பொதுவில் ருத்திராட்சங்கள் மாலைகளாய் கோர்த்தே பயன் படுத்தப் படுகிறது.

நூல் கயிறு முதல் உலோக கம்பிகள் வரை மாலைகளாய் கோர்க்க பயன் படுத்தப் படுகிறது.

இப்படி மாலைகளாய் கோர்ப்பதில் பல தனித்துவமான முறைகள் கையாளப் படுகின்றது.

நான்கு வகையிலான எண்ணிக்கையில் இந்த மாலைகள் கோர்க்கப் படுகின்றன.

1, 27, 54, 108 என்கிற எண்ணிக்கையிலான மாலைகளே பயன் பாட்டில் இருக்கிறது.

இப்படி மாலையாக கோர்க்கும் போது ஒரே வகையான முகங்களைக் கொண்ட உருத்திராட்சங்களையே பயன் படுத்திட வேண்டுமாம்.

ஆனால் வர்த்தக ரீதியாக மாலை கட்டுவோர் இவற்றை கவனத்தில் கொள்வதில்லை.

இப்படி மாலையாக கட்டும் போது ஒரு உருத்திராட்சம் எக்காரணத்தைக் கொண்டும் அடுத்த உருத்திராட்சத்தை தொட்டுக் கொண்டிருக்க கூடாதாம்.

உருத்திராட்ச மணிகளைத் தரும் உருத்திராட்ச மரம் என்பது ஒரு மூலிகைத் தாவரம்.

சித்த, ஆயுர்வேத மருத்துவங்களில் இவை மருந்துப் பொருட்களாக பயன் படுத்தப் படுகின்றன.

உருத்திராட்ச மரத்தின் பழமானது கடினமான ஓட்டுடன் கருநீலமாய் இருக்கும் ...

உருத்திராட்சங்கள் அருமருந்தாகவும் பயன்படுகிறது என்பது நீண்டகாலமாக இருந்துவரும் நம்பிக்கை.

## 5.5 திருத்தலங்கள் – திருவண்ணாமலை

| | |
|---|---|
| இறைவர் திருப்பெயர் | : அருணாசலேஸ்வரர், அண்ணாமலையார். |
| இறைவியார் திருப்பெயர் | : அபீதகுஜாம்பாள், உண்ணாமுலை. |
| தல மரம் | : மகிழம் |
| தீர்த்தம் | : பிரம தீர்த்தம் |
| வழிபட்டோர் | : விசுவாமித்திரர், பதஞ்சலி, வியாக்ரபாதர், அகத்தியர், சனந்தனர் ஆகியோர். |
| தேவாரப் பாடல்கள் | : 1. சம்பந்தர் - 1. உண்ணாமுலை , 2. பூவார்மலர்கொண் டடியார். |
| | 2. அப்பர் - 1. ஓதிமா மலர்கள் தூவி, 2. வட்ட னைமதி சூடியை 3. பட்டி ஏறுகந் தேறிப். |

*தல வரலாறு*

- பஞ்சபூத தலங்களுள் நெருப்புக்குரிய தலம்.
- இங்கு மலையே இறைவனின் சொரூபம்.
- வல்லாள மன்னனுக்கு மகனாக வந்தவதரித்து இறைவன் அருள் செய்த பதி இதுவே.

சிறப்புகள்

- கார்த்திகை தீப பெருவிழா, இத்தலத்தில் மிகவும் சிறப்புடையது.
- உயர்ந்தோங்கிய அருணாசலத்தின் - அண்ணாமலையின் அடிவாரத்தில் கோயில் உள்ளது.
- நினைக்க முத்தியருளும் நெடும் பதி.
- அருணகிரி நாதரின் வாழ்வில் அருள் திருப்பம் ஏற்படக் காரணமாக இருந்த பதி.
- ரமண மகரிஷி தவம் இருந்து அருள் பெற்ற தலம். (ரமணர் ஆசிரமம் இத்தலத்தில் உள்ளது.)
- யாத்ரிகர்களுக்குரிய சத்திரங்கள், திருக்கோயில் விடுதிகள் முதலியவை உள்ளன.
- மலைவலம் (கிரிவலம்) இங்குச் சிறப்புடையது.

- கிழக்குக் கோபுரத்தில் நடனக் கலையும் பிறவுமாகிய சிற்பங்கள் ஏராளமாக உள்ளன.

- கோயிலுள் நுழைந்தவுடனே சர்வசித்தி விநாயகருக்கு வலப்பால் உள்ள பாதாள லிங்கேஸ்வரர் சந்நிதி - ரமணர் தவம் செய்த இடம்; தரிசிக்கத் தக்கது.

- உள்ளே சென்றால் கம்பத்திளையனார் சந்நிதியும், ஞானப்பால் மண்டபமும் உள்ளன; 'அதலசேடனாராட' என்னும் திருப்புகழுக்கு முருகன் கம்பத்தில் வெளிப்பட்டு அருள் செய்த சந்நிதி.

- வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் முருகப்பெருமானுக்குச் சார்த்திய வேல் இன்றுமுள்ளது.

- சுப்பிரமணிய சந்நிதியில் பாம்பன் சுவாமிகளின் குமாரஸ்தவக் கல்வெட்டுள்ளது; அருகிலேயே அருணகிரிநாதரின் 'திருவெழுகூற்றிருக்கை' வண்ணத்தில் சலவைக் கல்லில் பொறித்துப் பதிக்கப்பட்டுள்ளது.

- அம்பாள் சந்நிதியில் சம்பந்தர் பதிகம், பாவை, அம்மானைப் படல்களின் கல்வெட்டுக்கள் உள்ளன.

- விசுவாமித்திரர், பதஞ்சலி, வியாக்ரபாதர், அகத்தியர், சனந்தனர் முதலானோர் வழிபட்ட லிங்கங்கள் உள்ளன.

- மூவர் - அருணாசலப் பெருமான், தங்கக் கவச நாகாபரணத்துடன் வைர விபூதி நெற்றிப்பட்டம் ஜொலிக்கக் காட்சித் தருகிறார்.

- 25 ஏக்கர் நிலப்பரப்பில் ஏழு பிரகாரங்களுடன் அமைந்துள்ள இத்திருக்கோயில் (திருவாசகத்தில்) திருவெம்பாவை பாடப்பட்ட சிறப்பினை உடையது.

- நாடொறும் ஆறுகால வழிபாடுகள் நடைபெறுகின்றன.

- தலபுராணம் - அருணாசல புராணம், அருணைக் கலம்பகம், சைவ எல்லப்ப நாவலர் பாடியுள்ளார்.

- 'அண்ணாமலை வெண்பா ' குருநமசிவாயர் பாடியது.

- குருநாமசிவாயர், குகைநமசிவாயர், அருணகிரியார், விருபாக்ஷதேவர், ஈசான்ய ஞானதேசிகர், தெய்வசிகாமணி தேசிகர் முதலியோர் இப்பதியில் வாழ்ந்த அருளாளர்கள்; இவர்களுள் பெரும் யோகியாகத் திகழ்ந்த தெய்வசிகாமணி தேசிகரின் வழியில் வந்த நாகலிங்க தேசிகர் என்பார் இராமேஸ்வரத்திற்கு யாத்திரையாகச் சென்றபோது, இராமநாதபுர ராஜா சேதுபதி அவர்களின் வேண்டுகோளையேற்று, இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஐந்து

கோயில்களின் நிர்வாகத்தைக் தாம் மேற்கொண்டதோடு குன்றக்குடியில் திருவண்ணாமலை ஆதீனம் என்ற பெயரில் ஓர் ஆதீனத்தையும் ஏற்படுத்தினார்; அதுவே 'குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்' என்று வழங்கப்பட்டுவருகின்றது.

- நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்கள் இத்தலத்தில் படியெடுக்கப்பட்டுள்ளன. இவை தமிழ், சம்ஸ்கிருதம், கன்னட மொழிகளில் உள்ளன. (கல்வெட்டுக்களின் விவரத்தை ஆலயத்தலவரலாற்று நூலில் விரிவாகக் காணலாம்.)
- இக்கோயிலின் சிறப்பைப் பற்றிப் பாடியோரும் நூல்களும் :- நமசிவாய சுவாமிகள் - சார பிரபந்தம், திருச்சிற்றம்பல நாவலர் - அண்ணாமலையார் சதகம், (காஞ்சிபுரம்) பல்லாவரம் சோணாசல பாரதியார் - அண்ணாமலை கார்த்திகை தீப வெண்பா, சோணாசல வெண்பா, திருவருணைக் கலிவெண்பா, சோணாசல சதகம், வடலூர் இராமலிங்கசுவாமிகள் - திருவண்ணாமலை திருவருட் பதிகம், புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் - அருணாசலேஸ்வரர் பதிகம், காஞ்சிபுரம் சபாபதி முதலியார்-அருணாசல பதிகம், யாழ்ப்பாணம் - நல்லூர் தியாகராஜப் பிள்ளை - அண்ணாமலையார் வண்ணம். இவையன்றி; உண்ணாமுலையம்மன் ப திகம், உண்ணாமுலையம்மன் சதகம், அருணாசலேஸ்வரர் அக்ஷரமாலை, அண்ணாமலை பஞ்சரத்னம் அருணாசல நவமணி மாலை, அருணாசல அஷ்டகம், அருணைக் கலம்பகம், திருவருணை வெண்பா முதலிய நூல்களும் உள்ளன.
- வள்ளல் பச்சையப்பர் இக்கோயிலில் அர்த்த சாமக்கட்டளைக்கு ஒரு லட்சம் வராகன் வைத்துள்ள செய்தியைத் தெரிவிக்கும் கல்வெட்டொன்று கோயிலில் உள்ளது.

*அமைவிடம்*

மாநிலம் : தமிழ் நாடு
சென்னை, வேலூர், கடலூர், சிதம்பரம், சேலம், திருச்சி, விழுப்புரம் முதலிய பல இடங்களிலிருந்தும் பேருந்துகள் நிறைய உள்ளன.

## 5.6 திருத்தலங்கள் – திருஆலவாய்

இறைவர் திருப்பெயர் : சொக்கலிங்கப்பெருமான், சோம சுந்தரேஸ்வரர்

இறைவியார் திருப்பெயர் : அங்கயற்கண்ணி, மீனாட்சிதேவி

தல மரம் : கடம்பு

தீர்த்தம் : பொற்றாமரை, வைகை ஆறு, எழுகடல்

வழிபட்டோர் : இந்திரன் முதலானோர்.

தேவாரப் பாடல்கள் : 1. சம்பந்தர் -
1. நீல மாமிடற் (1-94),
2. மந்திரமாவது நீறு (2-66),
3. மானின்நேர்விழி மாதராய் (3-39),
4. காட்டு மாவ துரித்துரி (3-47),
5. செய்ய னேதிரு (3-51),
6. வீடலால வாயிலாய் (3-52),
7. வேத வேள்வியை (3-108),
8. ஆலநீழ லுகந்த (3-115),
9. மங்கையர்க் கரசி (3-120).

2. அப்பர் -
1. வேதியா வேத கீதா (4-62),
2. முளைத்தானை முன்னே (6-19).

தல வரலாறு

- இந்திரன் விருத்திராசுரனைக் கொன்ற சாபம் தீர்க்க விமானத்தில் எழுந்தருளியது.
- இறைவன், சௌந்திர பாண்டியனாக இருந்து ஆட்சி செய்தது.
- அங்கயற்கண்ணியாம் தடாதகைப் பிராட்டியார் இறைவனை மணம் புரிந்து ஆட்சி செய்த பதி.
- 64 திருவிளையாடல்கள் புரிந்த தலம்.
- இராஜசேகர பாண்டியனுக்கு இறைவன் வெள்ளியம்பலத்தில் கால் மாறி ஆடிய தலம்.
- மாணிக்க வாசகர் இறைவனது பெருமையை அரிமர்த்தன பாண்டியனுக்கு உணர்த்திய தலம்.
- கூன் பாண்டியனின் வெப்பு நோய் ஞானசம்பந்தரால் நீக்கப்பெற்று, நின்றசீர் நெடுமாற நாயனார் ஆகிய தலம்.

- ○ அவதாரத் தலம் : ஆலவாய் (மதுரை).
- ○ வழிபாடு : குரு வழிபாடு.
- ○ முத்தித் தலம் : மதுரை.
- ○ குருபூசை நாள் : ஐப்பசி - பரணி.

*சிறப்புகள்*

- ஐந்து சபைகளுள் இது வெள்ளிச் சபை.
- தமிழ் சங்கம் நிறுவி தமிழ் வளர்த்த தலம்.
- சம்பந்தர் அனல், புனல் வாதம் செய்து சைவத்தை நிலைப் பெறச் செய்த இடம்.
- மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் சைவம் வளர்த்த தலம்.
- <u>மூர்த்தி நாயனார்</u> அவதரித்த தலம். சொக்கநாதருக்கு சாற்ற மூர்த்தி நாயனார் சந்தனம் அரைத்த சந்தனக்கல் இன்றும் கோயிலில் உள்ளது.
  - ○ அவதாரத் தலம் : மதுராபுரி - ஆலவாய் (மதுரை).
  - ○ வழிபாடு : இலிங்க வழிபாடு.
  - ○ முத்தித் தலம் : மதுரை.
  - ○ குருபூசை நாள் : ஆடி - கார்த்திகை.

அமைவிடம்

அ/மி. ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்,
மதுரை - 625 001.

இ. ஆணையர் / செயல் அலுவலர்
தொலைபேசி : 0452 - 2344360.
மாநிலம் : தமிழ் நாடு

## 5.7 திருத்தலங்கள் – திருவாரூர்

இறைவர் திருப்பெயர் : வன்மீகநாதர், புற்றிடங்கொண்டார் (மூலட்டானம்- பூங்கோவில்) தியாகராஜர்
இறைவியார் திருப்பெயர் : அல்லியம்பூங்கோதை, கமலாம்பிகை, நீலோத்பலாம்பாள்
தல மரம் : <u>பாதிரி</u>
தீர்த்தம் : கமலாலயம், சங்கு தீர்த்தம், கயா தீர்த்தம், வாணி தீர்த்தம்

வழிபட்டோர் : திருமால், திருமகள், இராமர், மன்மதன், முசுகுந்த சக்கரவர்த்தி.

தேவாரப் பாடல்கள் : 1. சம்பந்தர் -

1. சித்தம் தெளிவீர்காள்,
2. பாடலன் நான்மறையன்,
3. பவனமாய்ச் சோடையாய்,
4. பருக்கையானை மத்தக,
5. அந்தமாய் உலகு.

2. அப்பர் -

1. பாடிளம் பூதத்தினான்,
2. மெய்யெலாம் வெண்ணீறு,
3. சூலப் படையானை,
4. காண்டலே கருத்தாய் ,
5. முத்து விதானம்,
6. படுகுழிப் பவ்வத்தன்ன,
7. குழல் வலங்கொண்ட,
8. குலம்பலம்பாவரு,
9. வேம்பினைப் பேசி ,
10. எப்போதும் இறையும்,
11. கொக்கரை குழல்,
12. கைம்மான மதகளிற்றின்,
13. உயிரா வணமிருந்,
14. பாதித்தன் திருவுருவில்,
15. பொய்ம்மாயப் பெருங்கடலில்,
16. நீற்றினையும் நெற்றிமே,
17. திருமணியைத் தித்திக்கும்,
18. எம்பந்த வல்வினை நோய்,
19. இடர் கெடுமாறெண்ணுதியேல்,
20. கற்றவர்கள் உண்ணும்,
21. ஒருவனாய் உலகேத்த.

3. சுந்தரர் -

1. இறைகளோ டிசைந்த,
2. குருகுபா யக்கொழுங்,
3. தில்லைவாழ் அந்தணர்,
4. பத்திமையும் அடிமை,
5. பொன்னும் மெய்ப்,
6. கரையுங் கடலும்,

7. அந்தியும் நண்பகலும்,

8. மீளா அடிமை.

*தல வர லாறு*

- திருப்பாற்கடலில் திருமால் இத்தல இறைவர் தியாகராாசரைத் தமது மார்பில் வைத்துப் பூசித்தார். திருமாலின் மூச்சினால் அவர் மார்பின் ஏற்ற இறக்கங்களில் இறைவர் நடமாடினார். பின் இம்மூர்த்தத்தை இந்திரன் வரமாகப் பெற்று பூசித்தார்; அதன்பின் முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு இந்திரனால் வழங்கப்பெற்றது. (இத்துடன் வழங்கப்பட்ட மேலும் ஆறு தியாகராச மூர்த்தங்கள் நிறுவப்பட்ட தலங்களுடனே இவை <u>சப்த விடங்கத் தலங்கள்</u> எனப்படும்.

- இத்தலத்தில் சாயரட்சை வழிபாட்டின்போது தேவேந்திரனே வந்து பெருமானைப் பூசிப்பதாக ஐதீகம்.

- கமலை என்னும் பராசத்தி தவம் செய்த பதி.

- எல்லாச் சிவாலயங்களின் சந்நிதித்தியமும் சாயரக்ஷை எனப்படும் திருவந்திக்காப்பு நேரத்தில் இத்தலத்தில் விளங்குவதாக ஐதீகம்.

சிறப்புக்கள்

- இத்தலம் "பிறக்க முத்தி திருவாரூர்" என்று புகழப்படும் சிறப்பினது.

- தண்டியடிகள், கழற்சிங்கர், செருத்துணையார், விறன் மிண்டர், நமிநந்தியடிகள் முதலிய நாயன்மார்களின் திருத்தொண்டுகள் பரிமளித்த பதி இதுவே. கமலை ஞானப்பிரகாசரும் இங்கிருந்தவரே.

- இத்தலத்தின் தேர், திருவிழா, திருக்கோவில், திருக்குளம் ஆகியன மிகப் பெருமை வாய்ந்தது. திருவாரூர்த் தேர் அழகு.

- ஏழு கோபுரங்களைக் கொண்டது இத்திருக்கோயில்.

- கீழ்க்கோபுரம் 118 அடி உயரம் கொண்டது; இத்தலம் வீதிப் பிராகாரங்களையும் சேர்த்து ஐந்து பிராகாரங்களைக் கொண்டுள்ளது.

- கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி (கோயில் ஐந்துவேலி, குளம் ஐந்துவேலி, செங்கழுநீர்ஓடை ஐந்துவேலி என்பது இங்கு வழங்கப்படும் பழமொழி) (ஒருவேலி = 6.66 ஏக்கர்) என்று போற்றப்படும் மிகப் பெரிய சிவாலயமும், கமலாலயம் என்ற தீர்த்தமும் உடையத் தலம்.

- இத்தலம் மொத்தம் நான்குத் தீர்த்தங்களைக் கொண்டது; 1. கமலாலயம் - இது 5-வேலிப் பர ப்புடையது; தேவதீர்த்தம் எனப்படுகிறது. 2. சங்கு தீர்த்தம் - இது

ஆயிரங்கால் மண்டபத்தின் அருகிலுள்ளது; அமுததீர்த்தம் என்றும் பெயர். 3. கயா தீர்த்தம் - இது ஊருக்கு அப்பால் கேக்கரை என்று வழங்கும் இடத்தில் உள்ளது. 4. வாணி தீர்த்தம் - (சரஸ்வதி தீர்த்தம்) மேற்குப் பெரிய பிரகாரத்தில் சித்திரசபை மண்டபத்திற்கு எதிரில் உள்ளது.

- மேற்கண்ட தீர்த்தங்கள் தவிர "செங்கழுநீர்ஓடை" எனப்படும் நீரோடை கோயிலுக்கு அப்பால் 1-கி.மீ. தொலைவில் உள்ளது.

- தியாகேசர் எழுந்தருளும் ஏழு விடங்கத் தலங்களுள் ஒன்று (வீதி விடங்கர்); சப்த விடங்கத் தலங்களுள் இது "மூலாதார"த் தலம்.
- பஞ்ச பூத தலங்களுள் பிருதிவித் தலம்.
- இத்தலத்திற்குரிய வேறு பெயர்கள்:- 1. க்ஷேத்ரவரபுரம், 2. ஆடகேசுரபுரம், 3. தேவயாகபுரம், 4. முசுகுந்தபுரம், 5. கலிசெலா நகரம், 6. அந்தரகேசுபுரம், 7. வன்மீகநாதபுரம், 8. தேவாசிரியபுரம், 9. சமற்காரபுரம், 10. மூலாதாரபுரம், 11. கமலாலயபுரம் என்பனவாகும்.
- தியாகராஜர் பெருஞ்சிறப்புடன் அஜபா நடன மூர்த்தியாகத் திகழும் பெரும்பதி.
- இத்தலத்திறைவர் வீதிவிடங்கர், தேவரகண்டப்பெருமான், தியாகப்பெருமான், ஆடரவக்கிண்கிணிக்காலழகர், செங்கழுநீரழகர், செவ்வந்தித்தோடழகர், கம்பிக்காதழகர், தியாகவிநோதர், கருணாகரத் தொண்டைமான், அசைந்தாடும் அப்பர், அடிக்காயிரம் பொன் வழங்கியவர், கமலேசர், செம்பொன் தியாகர், தேவசிந்தாமணி, தியாகசிந்தாமணி என்று இன்னும் பலப்பல திருநாமங்களில் சிறப்பிக்கப்படுகிறார்.
- 1. ஆடுதண்டு - மணித்தண்டு, 2. கொடி - தியாகக்கொடி, 3. ஆசனம் - இரத்தின சிம்மாசனம், 4. மாலை - செங்கழுநீர்மாலை, 5. வாள் - வீரகண்டயம், 6. நடனம் - அஜபா நடனம், 7. யானை - ஐராவணம், 8. மலை - அரதன சிருங்கம், 9. முரசு - பஞ்சமுக வாத்தியம், 10. நாதஸ்வரம் - பாரி, 11. மத்தளம் - சுத்தமத்தளம், 12. குதிரை - வேதம், 13. நாடு - சோழநாடு, 14. ஊர் - திருவாரூர், 15. ஆறு - காவிரி, 16. பண் - பதினெண்வகைப்பண் என்பன இவையாவும் இத்தலத்துப் பெருமானுக்குரிய அங்கப்பொருள்களாகும்.
- தியாகேசப் பெருமான் இராஜாதி ராஜர் ஆதலின், அவர் தனியாக வீதிகளில் எழுந்தருள்வதில்லை; அவருடன் 1. அருளிப்பாடியார், 2. உரிமையில் தொழுவார், 3. உருத்திரப் பல்கணத்தார், 4. விரிசடை மாவிரதிகள், 5.

அந்தணர்கள், 6. சைவர்கள், 7. பாசுபதர்கள், 8. கபாலியர்கள் ஆகிய எட்டு கணங்கள் சூழ வருமாம்.

- ஏழாம் நூற்றாண்டில் நடைபெற்ற ஆதிரை திருநாளில் இந்த எண்கணங்களும் பெருமானுடன் ப வனி வந்ததை அப்பர் பெருமான் தன் தேவாரத்தில் கீழ் கண்டவாறு சொல்லோவியமாகத் தீட்டுகிறார்.

*அருமணித்தடம் பூண்முலை அரம்பையரொ டருளிப்பாடியர்*
*உரிமையிற் றொழுவார் உத்திர பல்கணத்தார்*
*விரிசடைவிர திகளந்தணர் சைவர்பாசுப தர்கபாலிகள்*
*தெருவினிற் பொலியுந் திருவாரூ ரம்மானே.*

<u>4 - 20 - 3</u>

- "இம்மணிமுத்தாற்றில் இப்பொன்னை இட்டு, ஆரூர் கமலாலயத் திருக்குளத்தில் எடுத்துக் கொள்" என்று முதுகுன்றத்தீசரால் சுந்தரரைப் பணிக்கப்பட்டு, அதன்படி கமலாலயத் திருக்குளத்தில் பொன் எடுக்கப்பட்டத் தலம்.

- சுந்தரர் வேண்டிக் கேட்டுக் கொண்டதன் பேரில், அவருக்காக இத்தல தியாகேசப் பெருமானார் நள்ளிரவில் பரவை நாச்சியாரிடம் தூது செல்ல இவ்வூர்த் தெருக்களில் நடந்து சென்ற பெருமையுடையத் திருத்தலம்.

- பரவை நாச்சியார் வாழ்ந்த பதி.

- சுந்தரர் இழந்த இரண்டாவது கண்ணை பெற்ற பதி.

- சுந்தரர், "திருத்தொண்டத் தொகை"யைப் பாடுவதற்கு, அடியார்களின் பெருமைகளை விளக்கிய பெருமை இப்பதிக்கேயுரியது.

- இது முசுகுந்த சோழன், மனு நீதிச் சோழன் ஆகியோர் ஆட்சி (வாழ்ந்த) செய்த சீர்மையுடைய பதி.

- <u>தண்டியடிகள்</u> அவதரித்த மற்றும் முத்தியடைந்தத் திருத்தலம். இத்திருக்கோயில் வளாக மூன்றாவது சுற்றில் மூலாதார கணபதிக்கு அருகில் தண்டியடிகள் நாயனாரின் திருவுருவச் சிலை உள்ளது.

    - தண்டியடிகள்
    - அவதாரத் தலம் : திருவாரூர்.
    - வழிபாடு : லிங்க வழிபாடு.
    - முத்தித் தலம் : திருவாரூர்.
    - குருபூசை நாள் : பங்குனி - சதயம்.

- அறுபத்து மூவருள் நமிநந்தி அடிகள், செருத்துணை நாயனார், கழற்சிங்கர், விறன்மிண்டர் ஆகியோரின் முக்தித் தலம்.

- சுந்தரமூர்த்தி நாயனாரின் தாயாரான இசைஞானியார் அவதரித்தத் (கமலாபுரம்) தலம்; இஃது திருவாரூரிலிருந்து மன்னார்குடி பாதையில் 7-கி.மீ. தொலைவில் உள்ளது. இத்தலத்தில் சிவன் கோயில் ஏதுமில்லை (2005). திருவாரூர் தெற்குக் கோபுரத்திற்கு வெளியே, பரவையார் வாழ்ந்த கிழக்கு நோக்கிய மாளிகை வளாகத்தில் இசைஞானியாருக்குத் திருவுருவச் சிலை உள்ளது.

- இசைஞானியார்
    - அவதாரத் தலம் : திருவாரூர் (கமலாபுரம்).
    - வழிபாடு : லிங்க வழிபாடு.
    - முத்தித் தலம் : திருநாவலூர்
    - குருபூசை நாள் : சித்திரை - சித்திரை.
- திருவாரூர் - கோயில், குளம், வீதி, தேர்த்திருவிழா ஆகியவற்றைப் பற்றிய தேவாரத் திருப்பாடல்களைக் கொண்டத் திருத்தலம்.

- திருவாரூர்க் கோயில் - தியாகராஜர் திருக்கோயில், திருமூலட்டானம், பூங்கோயில் என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகிறது.

- கிழக்குக் கோபுர வாயிலின் கோயிலுள் நுழைந்தால் வீதிவிடங்க விநாயகருக்குப் பின்னால் "பிரமநந்தி" எழுந்தருளியுள்ளார்; மழைவேண்டின் இப்பெருமானுக்கு நீர் கட்டுவதும், பால் கறக்க அடம்பிடிக்கும் பசுக்கள் நன்றாகப் பால் கறக்க, இப்பிரமநந்திக்கு அறுகுச் சாத்தி அதை பசுக்களுக்குக் கொடுக்கப்படும் வழக்கமும், நம்பிக்கையும் மக்களிடையே காணப்படுகின்றது.

- சோழர்கள், பாண்டியர்கள், விசயநகர வேந்தர்கள் ஆகியோரின் கல்வெட்டுகள் மொத்தம் 65 உள்ளன.

*அமைவிடம்*

அ/மி. தியாகராஜசுவாமி திருக்கோயில்,
திருவாரூர், & (அஞ்சல்),
திருவாரூர் (மாவட்டம்) - 610 001.
தொலைபேசி : 04366 - 242343.

மாநிலம் : தமிழ் நாடு

மயிலாடுதுறை - திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர் - திருத்துறைப்பூண்டி

இரயில்பாதையில் உள்ள நிலையம். தஞ்சாவூர், மயிலாடுதுறை, காரைக்கால் ஆகிய இடங்களிருந்து பஸ் வசதி உள்ளது.

## 5.8 நாயன்மார்கள் வரலாறு – கண்ணப்பர்

***யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் கத்தியரூபமாக செய்தது***

நிலத்திற் றிகழ்திருக் காளத்தி யார்திரு நெற்றியின்மே
னலத்திற் பொழிதரு கண்ணிற் குருதிகண் டுண்ணடுங்கி
வலத்திற் கடுங்கணை யாற்றன் மலர்க்கண் ணிடந்தப்பினான்
குலத்திற் கிராதனங் கண்ணப்ப னாமென்று கூறுவரே.

வேடரதி பதியுடுப்பூர் வேந்த னாகன்
விளங்கியசேய் திண்ணனார் கன்னி வேட்டைக்
காடதில்வாய் மஞ்சனமுங் குஞ்சிதரு மலருங்
காய்ச்சினமென் றிடுதசையுங் காளத்தி யாருக்குத்
தேடருமன் பினிலாறு தினத்தளவு மளிப்பச்
சீறுசிவ கோசரியுந் தெளியவிழிப் புண்ணீ
ரோடவொரு கண்ணப்பி யொருகண் ணப்ப
வொழிகவெனு மருள்கொடரு குறநின் றாரே.

பொத்தப்பிநாட்டிலே, உடுப்பூரிலே, வேடர்களுக்கு அரசனாகிய நாகன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் மனைவிபெயர் தத்தை. அவ்விருவரும் நெடுங்காலம் புத்திர பாக்கியம் இல்லாமையால் அதிதுக்கங்கொண்டு குறிஞ்சி நிலத்திற்குக் கடவுளாகிய சுப்பிரமணியசுவாமியுடைய சந்நிதானத்திலே சேவற்கோழிகளையும், ம யில்களையும் விட்டு, அவரை வழிபட்டு வந்தார்கள்

சுப்பிரமணியசுவாமியுடைய திருவருளினாலே தத்தையானவள் கருப்பவதியாகி, ஒரு புத்திரனைப் பெற்றாள். அப்பிள்ளையை நாகன் தன் கையிலே எடுத்தபொழுது திண்ணெனவாயிருந்தபடியால் அதற்குத் திண்ணன் என்று பெயரிட்டான். அத்திண்ணனார் வளர்ந்து உரிய பருவத்திலே வில்வித்தை கற்கத் தொடங்கி, அதிலே மகாசமர்த்தராயினார், நாகன் வயோதிகனானபடியால், வேட்டைமுயற்சியிலே இளைத்தவனாகி, தன்னதிகாரத்தைத் தன்புத்திரராகிய திண்ணனாருக்குக் கொடுத்தான்.

அந்தத்திண்ணனார் வேட்டைக் கோலங்கொண்டு வேடர்களோடும் வனத்திலே சென்று வேட்டையாடினார், வேட்டையாடும்பொழுது, ஒருபன்றியானது வேடராலே கட்டப்பட்ட வலையறும்படி எழுந்து, மிகுந்த விசையுடனே ஓடியது. அதைக் கண்ட திண்ணனார் அதைக்கொல்ல நினைந்து, அதைத் தொடர்ந்து பிடிக்கத்தக்க

விசையுடனே அது செல்லும் அடிவழியே சென்றார். நாணன் காடன் என்கின்ற இரண்டு வேடர்கள் மாத்திரம் அவருக்குப் பின் ஓடினார்கள். அந்தப்பன்றி நெடுந்தூரம் ஓடிப்போய், இளைப்பினாலே மலைச்சாரலிலே ஒருமரத்தின் நிழலிலே நின்றது. திண்ணனார் அதனை வேட்டையாடினார். நாணனும் காடனும் அந்தப் பன்றியைக் கண்டு திண்ணனாரை வியந்து வணங்கி, "நெடுந்தூரம் நடந்து வந்த படியால் பசி நம்மை மிகவருத்துகின்றது. நாம் இந்தப்பன்றியை நெருப்பிலே வாட்டித் தின்று, த்ண்ணீர் குடித்துக்கொண்டு வேட்டைக்காட்டுக்கு மெல்லப்போவாம்" என்றார்கள். திண்ணனார் அவர்களை நோக்கி, "இவ்வனத்திலே தண்ணீர் எங்கே இருக்கின்றது" என்று கேட்க; நாணன் "அந்தத் தேக்கமரத்துக்கு அப்புறம் போனால், மலைப்பக்கத்திலே பொன்முகலி யாறு ஓடுகின்றது" என்றன். அதைக்கேட்ட திண்ணனார் "இந்தப் பன்றியை எடுத்துக்கொண்டு வாருங்கள்; நாம் அங்கே தானே போவோம்" என்று சொல்லி, அதை நோக்கி; நடந்து, அரைக்காதவழி தூரத்துக்கு அப்பால் இருக்கின்ற திருக்காளத்தி மலையைக் கண்டு, நாணனை நோக்கி, "நமக்குமுன்னாகத் தோன்றுகின்ற மலைக்குப் போவோம்" என்று சொல்ல; நாணன் "இந்தமலையிலே, குடுமித்தேவர் இருக்கிறார். நாம் போனாற் கும்பிடலாம்" என்றான்.

திண்ணனார் "இந்தமலையைக் கண்டு இதை அணுக அணுக என்மேல் ஏற்றப்பட்ட பெரிய பாரம் குறைகின்றது போலும். இனிஉண்டாவது யாதோ! அறியேன்" என்று கூறினார். பன்றியைச் சமைக்கச் சொல்லிவிட்டு நாங்கள் இம்மலையிலே ஏறி, சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு வந்து சேருவோம்" என்று சொல்லி, நாணனோடும் அந்தப் பொன்முகலிநதியைக் கடந்து, மலைச்சாரலை அடைந்து, மலையிலே நாணன் முன்னே ஏற , தாமும் அளவில்லாத பேராசையோடும் ஏறிச் சென்று சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருத்தலைக் கண்டார், கண்டமாத்திரத்திலே, பரமசிவனுடைய திருவருட்பார்வையைப் பெற்று, அன்புருவமானார். நெடுங்காலம் பிரிந்திருந்த தன் குழந்தையைக் கண்ட மாதாவைப்போலத் தாழாமல் விரைந்தோடி, அக்கடவுளைத் தழுவி, மோந்து முத்தமிட்டார். இரண்டு கண்ணினின்றும் கண்ணீர் சொரிய வெயிலிடைப்பட்ட மெழுகு போல மனங்கசிந்துருக. "இந்தச்சுவாமி அடியேனுக்கு அகப்பட்டது என்ன ஆச்சரியம்" என்று சொல்லி ஆனந்தங் கொண்டார். " சிங்கம் யானை புலி கரடி துட்ட மிருகங்கள் சஞ்சரிக்கின்ற காட்டிலே நீர் யாதொரு துணையுமின்றி வேடர்போலத் தனியே இருப்பது ஏது" என்று சொல்லித் துக்கித்து, தம்முடையகையில் இருந்த வில்லுக் கீழே விழுந்ததையும் அறிந்தவரகிப் பரவசமடைந்தார். பின் ஒருவாறு தெளிந்து "இவருடைய முடியிலே நீரை வார்த்துப் பச்சிலையையும் பூவையும் இட்டவர் யாரோ" என்றார். அப்பொழுது சமீபத்திலே நின்ற நாணன் "நான் முற்காலத்திலே உம்முடைய பிதாவுடனே வேட்டையாடிக் கொண்டு இம்மலையிலே வந்தபொழுது, ஒரு பிராமணன் இவர்முடியிலே நீரைவார்த்து, இலையையும் பூவையும் சூட்டி உணவை ஊட்டி, சிலவார்த்தைகள் பேசினதைக்

கண்டிருக்கின்றேன், இன்றைக்கும் அவனே இப்படிச் செய்தான் போலும்" என்றான். அதைக்கேட்ட திண்ணனார் அந்தச் செய்கைகளே திருக்காளத்தியப்பருக்குப் விருப்பமான செய்கைகளென்று கடைப்பிடித்தார். பின்பு, "ஐயோ! இவருக்கு அமுது செய்தற்கு இறைச்சிகொடுப்பார் ஒருவரும் இல்லை. இவர் அங்கே தனியே இருக்கின்றார். இறைச்சி கொண்டு வரும் பொருட்டு இவரைப் பிரியவோ மனமில்லை. இதற்கு யாதுசெய்வேன்? எப்படியும் இறைச்சிகொண்டு வரவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு, சுவாமியைப் பிரிந்து சிறிது தூரம் போவார். கன்றைவிட்டுப் பிரிகின்ற தலையீற்றுப் பசுப்போல அவரிடத்திற்குத் திரும்பி வருவார் க ட்டி அணைத்துக் கொள்வார்; மீளப்போவார்; சிறிதுதூரம் போய் ஆசையோடு சுவாமியைத் திரும்பிப் பார்த்து நிற்பார். "சுவாமீ! நீர் உண்பதற்கு மிருதுவாகிய நல்ல இறைச்சியை நானே குற்றமறத் தெரிந்து கொண்டு வருவேன்" என்பார். "நீர் யாதொரு துணையுமின்றி இங்கே தனியே இருக்கிறபடியால் நான் உம்மைப் பிரியமாட்டேன். உமக்குப் பசி மிகுந்தபடியால் இங்கே நிற்கவுமாட்டேன். ஐயையோ! நான் யாது செய்வேன்" என்று சொல்லிக் கொண்டு கண்ணீர் இடைவிடாது பொழிய நிற்பார். பின்பு ஒருவாறு போய் வரத்துணிந்து, வில்லை எடுத்துக்கொண்டு, கையினாலே கும்பிட்டு, சுவாமி சந்நிதானத்தை நீங்கி, மலையினின்றும் இறங்கி நாணன்பின்னே வர , பொன் முதலியாற்றைக் கடந்து கரை ஏறி, அங்குள்ள சோலையிலே புகுந்தார்.

அதுகண்டு காடன் எதிரேபோய்க் கும்பிட்டு, நீர் இவ்வளவு நேரமும் தாழ்த்தது என்னை" என்றான். நாணன் அதைக் கேட்டு "இவர் மலையிலே சுவாமியைக் கண்டு அவ ரைத் தழுவிக்கொண்டு மரப்பொந்தைப் பற்றிவிடாத உடும்பைப்போல அவரை நீங்கமாட்டாதவராய் நின்றார். இங்கேயும் அந்தச் சுவாமி உண்ணுதற்கு இறைச்சி கொண்டுபோம்பொருட்டு வந்திருக்கிறார். எங்கள் குலத்தலைமையை விட்டுவிட்டார். அந்தச் சுவாமி வசமாய்விட்டார்' என்றான். உடனே காடன் "திண்ணரே! நீர் என்ன செய்தீர்? என்ன பைத்தியங்கொண்டீர்" என்று சொல்ல; திண்ணனார் அவன் முகத்தைப் பாராமல், பன்றியை நெருப்பிலே வாட்டி, சுவைபார்க்கும்படி அவைகளைத் தம்முடைய வாயிலே இட்டுப் பல்லினாலே மெல்ல மெல்லப் பலமுறை அதுக்கிப் பார்த்து, மிக இனியனவாகிய இறைச்சிகளெல்லாவற்றையும் தேக்கிலையினாலே தைக்கப்பட்ட கல்லையிலே வைத்து, இனியனவல்லாத இறைச்சிகள் எல்லாவற்றையும் புறத்திலே உமிழ்ந்தார். அதைக் கண்ட நாணன் காடன் இருவரும், "இவர் மிகப் பைத்தியங் கொண்டிருக்கின்றார். பெறுதற்கரிய இறைச்சியைக் காய்ச்சிப் பல்லினால் அதுக்கி வீணாக உமிழுகின்றார். மற்றையிறைச்சியைப் புறத்திலே எறிந்து விடுகின்றார். தாம் மிகப் பசியுடையராயிருந்தும், தனை உண்கின்றாரில்லை. எங்களுக்குத் தருகின்றாருமில்லை. இவர் தெய்வப் பைத்தியங்கொண்டுக்கின்றார். இதனைத் தீர்க்கத்தக்க வழி ஒன்றையும் அறியோம். தேவராட்டியையும் நாகனையும் அழைத்துக் கொண்டுவந்து இதைத் தீர்க்கவேண்டும். வேட்டைக்காட்டிலே நிற்கின்ற

ஏவலாளரையும் கொண்டு நாங்கள் போவோம்" என்று நினைத்துக்கொண்டு போனார்கள்.

திண்ணனார் அவ்விருவரும் போனதை அறியாதவராகி, சீக்கிரம் கல்லையிலே மாமிசத்தை வைத்துகொண்டு, திருமஞ்சனமாட்டும்பொருட்டு ஆற்றில் நீரை வாயினால்முகந்து, பூக்களைக்கொய்து தலைமயிரிலே செருகி, ஒருகையிலே வில்லையும் அம்பையும் மற்றக்கையிலே இறைச்சி வைத்த தேக்கிலையையும் எடுத்துக்கொண்டு, "ஐயோ! என்னுயிர்த் துணையாகிய சுவாமி மிகுந்த பசியினால் இளைத்தாரோ" என்று நினைந்து ஓடிப்போய்க் கடவுளை அடைந்தார். அடைந்து, தம்முடைய வாயில் இருக்கின்ற திருமஞ்சனநீரைத் தம்முடைய மனசில் உள்ள அன்பை உமிழ்பவர்போலத் திருமுடியின் மேல் உமிழ்ந்து, தம்முடைய தலையில் இருந்த பூக்களை எடுத்துத் திருமுடியின் மேல் சாத்தி, தேக்கிலையிலே படைத்த இறைச்சியைத் திருமுன்னே வைத்து, "சுவாமீ! இதை அமுதுசெய்தருளும்" என்று சொல்லி, உண்பித்தார். பின்பு சூரியன் அஸ்தமயமாயிற்று, திண்ணனார் அவ்விரவிலே துஷ்டமிருகங்கள் சுவாமிக்குத் துன்பஞ்செய்தல் கூடுமென்று அஞ்சி, அம்பு தொடுக்கப்பட்ட வில்லைக் கையிலே பிடித்துக்கொண்டும், மறந்தும் கண்ணிமையாமல் சுவாமிக்குப் ப க்கத்திலே விழித்துக்கொண்டு நின்றார். அப்படி நின்ற திண்ணனார் வைகறையிலே சுவாமிக்கு இறைச்சி கொண்டுவரும் பொருட்டு, வேட்டையாடுதற்கு மலைச்சாரலுக்குப் போனார். அது நிற்க.

அறிவு அருள் அடக்கம் தவம் சிவபத்தி முதலியவை எல்லாம் திரண்டு ஒரு வடிவம் எடுத்தாற்போன்றவரும், முனிவரும், திருக்காளத்தியப்பரைத் தினந்தோறும் சைவாகமவிதிப்படி அருச்சிப்பவருமாகிய சிவகோசரியார் என்பவர், பிரமமுகூர்த்தத்திலே எழுந்து போய், பொன்முகலியாற்றிலே நீராடி, சுவாமியை அருச்சிக்கும் பொருட்டுத் திருமஞ்சனமும் பத்திர புஷ்பமும் எடுத்து, சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டு, சுவாமி சந்நிதனத்திலே போனார். போகும் பொழுது அங்கே வெந்த இறைச்சியும் எலும்பும் கிடக்கக் கண்டு நடுநடுங்கி, குதித்துப் பக்கத்திலே ஓடினார். ஓடி நின்று, "தேவாதிதேவரே! தேவரீருடைய சந்நிதானத்தை அடைதற்கு அஞ்சாத துஷ்டராகிய வேட்டுவப்புலையர்களே இந்த அநுசிதத்தைச் செய்தார்கள் போலும், அவர்கள் இப்படிச் செய்து போதற்குத் தேவரீர் திருவுளம் இசைந்தீரோ" என்று சொல்லி, பதறி அழுது விழுந்து புரண்டார். பின்பு 'சுவாமிக்கு அருச்சனை செய்யாமல் தாழ்த்தலால் பயன்யாது' என்று நினைந்து, அங்கே கிடந்த இறைச்சியையும் எலும்பையும் தேக்கிலையையும் திருவலகினால் மாற்றி, மீண்டும் பொன் முகலியாற்றிலே நீராடி, மீண்டும் திரும்பிவந்து, வேத மந்திரத்தினாலே சுத்திசெய்து, சுவாமிக்கு அபிஷேகம் பண்ணி பத்திரபுஷபங்களால், அருச்சனை செய்தார் செய்து, திருமுன்னே நின்று, இரண்டு கைகளையும் சிரசின்மேலே குவித்து, இரண்டு கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் சொரிய திருமேனியெங்கும்

மயிர்பொடிப்ப, அக்கினியில் அகப்பட்ட மெழுகுபோல மனம் மிக உருகி, நாத்தழும்ப, கீத நடையுள்ளதாகிய சாமவேதம் பாடினார். பாடியபின் பலமுறை வலம் வந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, அருமையாக நீங்கிப் போய், தபோவனத்தை அடைந்தார். அது நிற்க.

முன்னே வேட்டையாடுதற்கு மலைச்சாரலிலே சென்ற திண்ணனார் பன்றி மான் கலை மரை கடமை என்னும் மிருகங்களைக்கொன்று, அவைகளினில் இறைச்சியை முன்போலப் பக்குவப்படுத்தி, தேக்கிலையில் வைத்து, தேனைப் பிழிந்து, அதனோடு கலந்து, முன்போலத் திருமஞ்சனமும் புஷ்பமுங்கொண்டு, மலையிலே ஏறி, சுவாமிசந்நிதானத்தை அடைந்து, முன்போலப் பூசைசெய்து, இறைச்சிக் கல்லையைத் திருமுன்னே வைத்து, "இந்த இறைச்சி முன்கொண்டுவந்தது போலன்று, இவை பன்றி மான் கலை மரை கடமை என்கின்ற மிருகங்களின் இறைச்சி, இவைகளை அடியேனும் சுவைத்துப் பார்த்திருக்கின்றேன். தேனும் கலந்திருகிறது. தித்திக்கும்" என்று சொல்லி, உண்பித்து, அவருக்குப் பக்கத்திலே பிரியாமல் நின்றார். அப்பொழுது முதனாட்போன நாணனும் காடனும் ஆகிய இருவராலும் தன்புத்திரராகிய திண்ணனாருடைய செய்கைகளை அறிந்த நாகன் ஊணும் உறக்கமுமின்றித் தேவராட்டியையுங் கொண்டுவந்து, திண்ணனாரைப் பற்பல திறத்தினாலே வசிக்கவும், அவர் வசமாகாமையைக் கண்டு, சிந்தை நொந்து, "இனியாதுசெய்வோம்" என்று சொல்லிக்கொண்டு; அவரை விட்டுத் திரும்பிப்போய்விட்டார்கள்.

சிவபெருமானோடு ஒன்றி அவ்விறைப்பணியின் வழுவாது நிற்குந் திண்ணனார் பகற்காலத்திலே மிருகங்களைக் கொன்று சுவாமிக்கு இறைச்சியை ஊட்டியும், இராக்காலத்திலே நித்திரை செய்யாமல் சுவாமிக்கு அருகே நின்றும், இப்படித் தொண்டுசெய்து வந்தார். சிவகோசரியாரும் தினந்தோறும் வந்து, சந்நிதானத்திலே இறைச்சி கிடத்தலைக் கண்டு, இரங்கிச் சுத்திசெய்து, சைவாகமவீதிப்படி அருச்சித்துக்கொண்டு, "இந்த அநுசிதம் நிகழாமல் அருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்து வந்தார். திருக்காளத்தியப்பர் அந்தச் சிவகோசரியாருடைய மனத்துயரத்தை நீக்கும்பொருட்டு ஐந்தாநாள் இராத்திரியில் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே! அவனை வேடுவன் என்று நீ நினையாதே. அவனுடைய செய்கைகளைச் சொல்வோம்.; கேள். அவனுடைய உருவமுழுவதும் நம்மேல் வைக்கப்பட்ட அன்புருவமே. அவனுடைய அறிவுமுழுதும் நம்மை அறியும் அறிவே, அவனுடைய செய்கைகள் எல்லாம் நமக்கு இதமாகிய செய்கைகளே. நம்முடைய முடியின்மேல் உன்னாலே சாத்தப்பட்ட பூக்களை நீக்கும்படி அவன் வைக்கின்ற செருப்படி நம்முடைய குமாரனாகிய சுப்பிரமணியனுடைய காலினும் பார்க்க நமக்கு மிகுந்த ஆனந்தத்தைத் தருகின்றது. அவன் தன் வாயினால் நம்மேல் உமிழுகின்ற நீரானது, அன்புமயமாகிய அவனுடைய தேகமென்னும் கொள்கலத்தினின்றும் ஒழுகுகின்ற படியால்; கங்கை முதலாகிய புண்ணிய

தீர்த்தங்களைப் பார்க்கினும் நமக்குப் பரிசுத்தமுள்ளதாய் இருக்கின்றது. அவன் நமக்குச் சாத்துகின்ற புஷ்பங்கள், அவனுடைய மெய்யன்பானது விரிந்து விழுதல்போல விழுதலால், பிரம விஷ்ணு முதலாகிய தேவர்கள் நமக்குச் சாத்தும் புஷ்பங்களும் அவைகளுக்குச் சற்றேனும் சமானமாகாவாம். அவன் நமக்குப் படைக்கின்ற மாமிசம், பதமாக வெந்திருக்கின்றதோ என்று அன்பினால் உருகி இளகிய மனசினோடும் மென்று, சுவைபார்த்துப் படைக்கப் பட்டபடியால், வேதவிதிப்படி யாகம் செய்கின்றவர்கள் தரும் அவியிலும் பார்க்க நமக்கு அதிக மதுரமாயிருக்கின்றது. அவன் நம்முடைய சந்நிதானத்தில் நின்று சொல்லும் சொற்கள், அன்பினோடும் நம்மையன்றி மற்றொருவரையும் அறியாது வெளிப்படுதலால், வேதங்களும் மகாமுனிவர்கள் மகிழ்ந்து செய்கின்ற ஸ்தோத்திரங்களும் ஆகிய எல்லாவற்றிலும் பார்க்க நமக்கு மிக இனியனவாயிருக்கின்றன. அவனுடைய அன்பினால் ஆகிய செய்கைகளை உனக்குக் காட்டுவோம். நீ நாளைக்கு நமக்குப் பிற்பக்கத்திலே ஒளிந்திருந்து பார்" என்று சொல்லி மறைந்தருளினார். சிவகோசரியார், பரமசிவன் தமக்கு அருளிச்செய்த திருவார்த்தகளை நினைந்து நினைந்து, "அறியாமையே நிறைந்துள்ள இழிவாகிய வேடுவர் குலத்திலே பிறந்த அவருக்கு வேதாகமாதி சாஸ்திரங்களிலே மகாபாண்டித்தியமுடைய மகாமுனிவர்கள் தேவர்களிடத்திலும் காணப்படாத உயர்வொப்பில்லாத இவ்வளவு பேரன்பு வந்தது, ஐயையோ! எவ்வளவு அருமை அருமை" என்று ஆச்சரியமும், "இப்படிப்பட்ட பேரன்பர் செய்த அன்பின் செய்கைகளைப் புழுத்தநாயினும் கடையனாகிய பாவியேன் அநுசிதம் என்று நினைந்தேனே! ஐயையோ? இது என்ன கொடுமை" என்று அச்சமும் அடைந்து, வைகறையிலே போய்ப் பொன்முகலியாற்றிலே நீராடி மலையில் ஏறி, முன்போலச் சுவாமியை அருச்சித்து, அவருக்குப் பிற்பக்கத்திலே ஒளித்திருந்தார்.

சிவகோசரியார் வருதற்கு முன்னே வேட்டையாடுதற்குச் சென்ற திண்ணனார் வேட்டையாடி, இறைச்சியும் திருமஞ்சனமும் புஷ்பமும் முன்போல அமைத்துக்கொண்டு மிகவிரைவாகத் திரும்பினார். திரும்பி வரும்பொழுது, பலபல துர்ச்சகுனங்களைக்கண்டு, "இந்தச்சகுனங்களெல்லாம் உதிரங் காட்டுகின்றன. ஆ கெட்டேன்! என்கண்மணிபோன்ற சுவாமிக்கு என்ன அபாயம் நேர்ந்த்தோ! அறியேனே" என்று மனங்கலங்கி, மிகவிரைவாக நடந்தார். அடியார்களுடைய பத்தி வலையில் அகப்படுகின்ற அருட்கடலாகிய பரமசிவன் திண்ணனாருடைய அன்பு முழுதையும் சிவகோசரியாருக்குக் காட்டும் பொருட்டுத் திருவுளங்கொண்டு, தம்முடைய வலக்கண்ணினின்றும் இரத்தம் சொரியப்பண்ணினார். திண்ணனார் தூரத்திலே கண்டு விரைந்தோடி வந்தார் வந்தவுடனே, இரத்தஞ் சொரிதலைக் கண்டார். காண்டலும், வாயிலுள்ள திருமஞ்சனம் சிந்த, கையில் இருந்த இறைச்சி சிதற, அம்பும் வில்லும் விழ, தலைமயிரிலே செருகப்பட்ட புஷ்பங்கள் அலைந்து சோர, ஆட்டுகின்ற கயிறு அற்றபொழுது வீழ்கின்ற நாடகப் பாவைபோலச் சீக்கிரம்

பதைபதைத்து நிலத்திலே விழுந்தார். விழுந்தவர் எழுந்து போய், இரத்தத்தைப் பலமுறை கையினாலே துடைக்க; அது நிற்காத்தைக் கண்டு, அதற்கு இன்னது செய்வோம் என்று அறியாதவராகி, பெருமூச்செறிந்து, திரும்பிப்போய் விழுந்தார். நீண்டநேரம் உயிரற்றவர்போல் போலக்கிடந்தார், பின் ஒருவாறு தெளிந்து, "இப்படிச் செய்தவர்கள் யாவர்" என்று சொல்லிக்கொண்டு எழுந்தார். எங்கும் பார்த்தார், வேடர்களையேனும் விலங்குகளையேனும் காணாதவராகி, திரும்பிவந்து, குறைவில்லாத துன்பத்தினாலே மனம் விழுங்கப்பட்டு, சுவாமியைக் கட்டிக்கொண்டு, வாய்விட்டுக் கண்ணீர்சொரிய அழுதார். "என்னுயிரினும் சிறந்தவரும் அடைந்தவர்கள் அன்பினாலே பிரியமாட்டாதவரும் ஆகிய சுவாமிக்கு எப்படி இந்தத் துன்பம் சம்பவித்ததோ! இதைத் தீர்ப்பதற்கு மருந்தொன்றை அறியேனே! ஐயையோ! இதற்கு என்ன செய்வேன்" என்றார். இந்த உதிரம் என்னசெய்தால் நிற்குமோ? இந்தத் தீங்கைச் செய்தவர்களைக் காணேன். வேடர்கள் அம்பினாலாகிய புண்ணைத் தீர்க்கின்ற பச்சிலைமருந்துகளை மலையடிவாரத்திலே பிடுங்கிக்கொண்டு வருவேன்" என்று சொல்லிக்கொண்டு போனார். தன்னினத்தைப் பிரிந்துவந்த இடபம்போலச் சுவாமியைப் பிரிந்து வந்ததினால் வெருட் கொண்டு வனங்களெங்குந் திரிந்து, பல்வகையாகிய பச்சிலைகளைப் பிடுங்கிக் கொண்டு, சுவாமிமேல் வைத்த மனசிலும் பார்க்க விரைந்து வந்து, அம்மருந்துகளைப் பிழிந்து அவர் கண்ணிலே வார்த்தார். அதினால், அக்கண்ணிவிரத்தம் தடைப்படாமையைக் கண்டு, ஆவிசோர்ந்து, "இனி நானிதற்கு என்ன செய்வேன்" என்று ஆலோசித்துக் கொண்டு நின்றார். நிற்க. "ஊனுக்கு ஊன் இட வேண்டும்" என்னும் பழமொழி ஏற்ப "இனி என்னுடைய கண்ணை அம்பினாலே இடந்து அப்பினால் சுவாமியுடைய கண்ணினின்றும் பாயும் இரத்தம் தடைப்படும்" என்று நிச்சயித்துக்கொண்டு, மன மகிழ்ச்சியோடும் திருமுன்னே இருந்து, அம்பையெடுத்துத் தம்முடைய கண்ணைத்தோண்டிச் சுவாமியுடைய கண்ணிலே அப்பினார். அப்பினமாத்திரத்திலே இரத்தம் தடைப்பட்டதைக் கண்டார். உடனே மகிழ்ச்சிக் கடலிலே மிதந்தார். மலைபோலப் பருத்த புயங்களிலே கைகளினாலே கொட்டி ஆரவாரித்தார் கூத்தாடினார். "நான் செய்த செய்கை நன்று நன்று" என்று சொல்லி வியந்து, எல்லையற்ற ஆனந்தத்திலே மூழ்கினார். இப்படி மகிழ்ச்சியில் மூழ்கிடும் வேளையில், திருக்காளத்தியீசுரர் அந்தத் திண்ணனாருடைய பேரன்பைச் சிவகோசரியாருக்குப் பின்னுங் காட்டுதற்குத் திருவுளங்கொண்டு, தம்முடைய மற்றையிடக்கண்ணிலும் இரத்தம் சொரியச் செய்தார். அது திண்ணனாருடைய அளவில்லாத மகிழ்ச்சியைக் குறைத்தது. திண்ணனார் மீண்டும் துன்னபத்திற்கு ஆளானார். பின்னர் ஒருவாறு தெளிந்து, "இதற்கு நான் அஞ்சேன், மருந்து கைகண்டு கொண்டேன் இன்னும் ஒருகண்ணிருக்கின்றதே! அதைத்தோண்டி அப்பி இந்நோயைத் தீர்ப்பேன்" என்று துணிந்து. தம்முடைய கண்ணைத் தோண்டியபொழுது சுவாமியுடைய கண் இவ்விடத்திலிருக்கின்றது என்று தெரியும் பொருட்டு, ஒரு செருப்புக்காலை அவர் கண்ணின் அருகிலே ஊன்றிக்

கொண்டு, பின்னே மனசிலே பூர்த்தியாகிய விருப்பத்தோடும் தம்முடைய கண்ணைத்தோண்டும்படி அம்பை வைத்தார். கருணைக் கடலாகிய கடவுள் அதைச் சகிக்க இயலாதவராகி, தம்முடைய அருமைத் திருவாய் மலரைத் திறந்து, "நில்லு கண்ணப்ப நில்லு! கண்ணப்ப! என்னன் புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப! என்று அருளிச் செய்து, அவருடைய கண்ணைத் தோண்டும் கையைத் தமது திருக்கரத்தினாலே பிடித்துக்கொண்டார். மகாஞானியாகிய சிவகோசரியார் இந்தச் நிகழ்வு முழுதையும் கண்டு, ஆச்சரியமடைந்து, சுவாமியை வணங்கினார். அற்றைநாள் முதலாகப் பெரியோர்கள் சுவாமி சொல்லிய படியே அவருக்குக் கண்ணப்பர் என்னும் பெயரையே வழங்குகிறார்கள். நெடுங்காலமாக உஷ்ணமாகிய அக்கினி மத்தியில் நின்று ஐம்புலன் வழியே செல்லாதபடி மனசை ஒடுக்கி அருந்தவஞ் செய்கின்றவர்களுக்கும் கிட்டாத பரம்பொருளாகிய கடவுள் ஆறுநாளுக்குள்ளே பெருகிய அன்பு மேலீட்டினாலே, தம்முடைய திருநயனத்தில் இரத்தத்தைக் கண்டு அஞ்சித் தம்முடைய கண்ணை இடந்து அத்திருநயனத்தில் அப்புந் திண்ணனாருடைய கையைத் தமது அருமைத் திருக்கரத்தினாலே பிடித்துக்கொண்டு, "குறைவற்ற பத்தியையுடைய கண்ணப்பா, நீ நமக்கு வலப்பக்கத்திலே நில்" என்று திருவருள் புரிந்தார். இதைப் பார்க்கிலும் பெற வேண்டிய பெரும்பேறு யாது?

## 5.9 நாயன்மார்கள் வரலாறு – சிறுத்தொண்டர்

***யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் கத்தியரூபமாகச் செய்தது***

பல்குமருத் துவரதிபர் செங்காட்டங் குடிவாழ்
படைத்தலைவ ரமுதளிக்கும் பரஞ்சோதி யார்மெய்ச்
செல்வமிகு சிறுத்தொண்டர் காழி நாடன்
றிருவருள் சேர்ந் தவர்வளருஞ் சீராளன் றன்னை
நல்குதிரு வெண்காட்டு நங்கைசமைத் திடப்பின்
னன்மதிச்சந் தனத்தாதி தலைக்கறியிட் டுதவப்
புல்கவரும் வயிரவர்தா மகிழ்ந்துமக வருளப்
போற்றியவர் சிவனருளே பொருந்தினாரே.

சோழமண்டலத்திலே, திருச்செங்காட்டங்குடியிலே, மகாமாத்திரர் குலத்திலே, பரஞ்சோதியாரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஆயுள் வேதங்களிலும், படைக்கலத் தொழில்களிலும், குதிரை யேற்றம், யானையேற்றங்களிலும் மிகச் சிறந்தவர். வேதம் முதலிய நூல்களை மெய்ப்பொருளை அறிதல் வேண்டுமென்னும் அவாவினோடு திருவருளை முன்னிட்டு ஓதியுணர்ந்தமையால், பரமசிவனே மெய்க்கடவுள் என்றும், அவருடைய திருவடிகளை அடைதலே முத்தி நெறியென்றுந் தெளிந்து, அவருடைய திருவடிகளை அகோராத்திரம் இடைவிடாது அன்பினோடு தியானிப்பவராயினார். சிவனடியார்களுக்கு எக்காலமுந் திருத்தொண்டு செய்பவர்.

அவர் அரசனிடத்திலே நேசம்பூண்டு, அவன்பொருட்டு யானை செலுத்தி, அவனோடு மாறுபட்ட பலவரசர்களை வென்று, அவர்களின் தேசங்களைக் கைப்பற்றி, வெற்றிக்கொடி நாட்டினார். அதனால் அரசரால் நன்கு மதிக்கப்பட்டார். ஒருமுறை உத்தரதேசத்திலே வாதாவி என்னும் நகரத்திற்சென்று, அதனை வென்று, பலவகை இரத்தினங்களும், நிதிக்குவைகளும் யானைக்கூட்டங்களும், குதிரைக்கூட்டங்களும் அரசனுக்கு கொண்டுவந்தார். அது கண்டு, அரசன் அவருடைய யானையேற்றத்தின் வலிமையை அதிசயித்துப் புகழ்ந்து பேச, அவரை அறிந்த மந்திரிகள் அரசனை நோக்கி "மகாராஜாவே! இவர் பரமசிவனுக்குத் திருத்தொண்டு செய்கையால் இவ்வுலகத்திலே இவருக்கு எதிராவார் ஒருவருமில்லை" என்றார்கள். அரசன் அதைக் கேட்டு அஞ்சி நடுநடுங்கி, இரண்டு கண்களினின்றும் கண்ணீர் சொரிய, 'இவர் நமது கடவுளாகிய பரமசிவனுடைய திருத்தொண்டர் என்பதை உணராது, கொடிய போர்முனையிலே விட்டிருந்தேன், ஐயையோ! இது எவ்வளவு கொடிய பாவம்" என்று சொல்லி, பின்பு பரஞ்சோதியாரை நோக்கி "சுவாமீ! இக்குற்றத்தைப் பொறுத்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்து நமஸ்கரித்தான். பரஞ்சோதியார் அரசன் தம்மை நமஸ்கரித்தற்கு முன் தாம் அவ ரை நமஸ்கரித்து, "மகாராஜாவே! நான் எனது தொழிலுக்கேற்ற பணியையே செய்தேன். அதனாலே என்ன தீங்கு" என்றார். அரசன் அவருக்கு நிறைந்த நிதிக்குவைகளைக் கொடுத்து, "நீர் உம்முடைய நிலைமையை நான் அறியாவண்ணம் நடத்திக்கொண்டு வந்தீர். இனி என் மனக்கருத்துக்கு இசைந்து, எனக்குப் பணிசெய்தலை ஒழிந்து, நீர் விரும்பியவாறே சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் திருத்தொண்டு செய்யும்" என்று விடைகொடுத்தான். பரஞ்சோதியார் விடைபெற்றுக் கொண்டு, தம்முடைய திருப்பதியிற்சென்று, கணபதீச் சரத்தில் எழுந்தருளியிருக்கின்ற கடவுளை வணங்கி, அவருக்குத் திருத்தொண்டுகளை வழுவாது செய்வாராயினார். திருவெண்காட்டுநங்கையாரென்னும் மங்கையாரோடு கூடி இல்லறத்தில் ஈடுபட்டார். நாடோறும் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்து, பின்னரே தாம் உண்பார் சிவனடியார்களை மிகுந்த அன்பினோடு வழிபட்டு, அவர்கள் திருமுன்பே மிகச்சிறியராய் ஒழுகுகின்றமையால், அவருக்குச் சிறுத்தொண்டரென்னும் பெயர் கொடுக்கப்பட்டது கணபதீச்சுரருடைய திருவருளினாலே அவருக்குச் சீராள தேவரென்னும் புத்திரர் அவதரித்தார். அப்பிள்ளைக்கு ஐந்து வயசிலே வித்தியாரம்பஞ் செய்வித்தார். அந்நாளிலே அத்திருப்பதிக்கு எழுந்தருளி வந்த திருஞானசம்பந்தப்பிள்ளையாரை எதிர்கொண்டு அழைத்து, அவரை வணங்கித் துதித்து, அவராலே திருப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடியருளப்பட்டார்.

சிவபெருமான் சிறுத்தொண்டநாயனாருடைய மெய்யன்பை நுகர்ந்து அருளுதற்குத் திருவுளங்கொண்டு, வைரவர் கோலங்கொண்டு, திருக்கைலாசத்தினின்றும் நீங்கி, திருச்செங்காட்டங்குடியை அடைந்தார். சிறுத்தொண்டநாயனாருடைய

வீட்டுவாயிலிற்சென்று, "சிறுத்தொண்டர் வீட்டில் இருக்கின்றாரோ" என்று வினாவ; தாதியாராகிய சந்தனநங்கையார் முன் வந்து வணங்கி, "சுவாமீ! அவர் சிவனடியார்களைத் தேடிப் புறத்தே போய்விட்டார். தேவரீர் உள்ளே எழுந்தருளும்" என்றார். அதற்கு வைரவர் "பெண்கள் இருக்கும் இடத்தில் நாம் தனியே புகோம்" என்று அருளிச்செய்ய; திருவெண்காட்டுநங்கையார் அதைக்கேட்டு, "இவ்வடியவர் போய்விடுவார் போலும்" என்று பயந்து, விரைந்து வந்து, "சுவாமீ! அடியேனுடைய நாயகர் எப்போதும் சிவனடியாரைத் திருவமுது செய்விப்பவர். இன்றைக்கு ஒருவரையுங் காணாமையால் தேடிப்போய் இருக்கிறார். இப்பொழுதே வந்து விடுவார் எழுந்தருளியிரும்" என்று கூறி இருக்கச் சொன்னார். வைரவர் "நாம் உத்தரதேசத்திலுள்ளேம். சிறுத்தொண்டரைக் காண வந்தேம். எப்படியும் அவர் இல்லாத போது நாம் இங்கே இரோம். கணபதீச்சரத்தில் உள்ள திருவாத்தி மரத்தின் கீழ் இருப்போம். அவர் வந்தமாத்திரத்திலே அவருக்குத் தெரிவியுங்கள்" என்று சொல்லித் திருவாத்தியை அணைந்து அதன்கீழ் இருந்து அருளினார்.

சிறுத்தொண்டநாயனார் சிவனடியார்களைத் தேடி எங்குங் காணாது, வீட்டுக்குத் திரும்பிவந்து, மனைவியிடம் கூறினார் . மனைவியார் நடந்த செய்தியைக் கூற உடனே சிறுத்தொண்ட நாயனார் மிகுந்த விரைந்து சென்று, அவரைக் கண்டு வணங்கி நிற்க, அவர் "பெரியசிறுத் தொண்டர் நீரோ" என்று திருவாய்மலர்ந்தருளினார். சிறுத்தொண்டநாயனார் அவரை வணங்கி, "சுவாமீ! சிவனடியார்கள் தங்கள் கருணை மேலீட்டினாலே அடியேனையே அப்படி அருளிச்செய்வார்கள். அது நிற்க. இன்றைக்குத் திருவமுதுசெய்யவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார். வைரவர் "அன்பரே! நாம் உத்தர தேசத்தில் உள்ளேம் உம்மைக் காண வந்தோம். நம்மை அமுது செய்வித்தல் உம்மால் முடியாது. அது மிக அருமை" என்றார். சிறுத்தொண்டநாயனார் "தேவரீர் திருவமுது செய்தருளும் இயல்பை அருளிச்செய்யும். சீக்கிரம் பாகம் பண்ணுவிப்பேன். சிவனடியார்கள் தலைப்பட்டால் தேடுதற்கு அரியனவும் எளியனவாம்" என்று விண்ணப்பஞ் செய்ய; வைரவர் "நாம் ஆறு மாசத்துக்கு ஒருமுறை பசுவைக் கொன்று உண்போம். அதற்கு உரிய நாளும் இந்நாளேயாம். அப்படியூட்டுதல் உம்மாலியலாது" என்றார். சிறுத்தொண்டநாயனார் "மிகநன்று, அடியேன் அநேக பசுக்களையுடையேன். தேவரீருக்குப் விருப்பமான பசு இன்னது என்று அருளிச் செய்வீராகில், அடியேன் விரைந்து சென்று பாகம் பண்ணுவித்துக் காலந்தாழ்க்காமல் வருவேன்" என்று சொல்ல; "வைரவர் நாம் உண்பது நரபசு, அது ஐந்து வயசினையுடையதாயும், அவயவப் பழுதில்லாததாயும், ஒரு குடிக்குத் தான் ஒன்றேயாயும் இருக்க வேண்டும். அவ்வியல்புடைய சிறுவனை மனமகிழ்ச்சியோடு தாய் பிடிக்கத் தந்தை அரிதல் வேண்டும். இப்படிச் சமைக்கப்பட்ட கறியே நாம் இங்கு உண்போம்" என்றார் சிறுத்தொண்டநாயனார் "தேவரீர் திருவமுது செய்வீராகில்,

அடியேனுக்கு இதுவும் அரிதன்று" என்று சொல்லி, அவரை வணங்கி விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போயினார்.

சிறுத்தொண்டநாயனாருடைய வரவை நோக்கி நின்ற மனைவியார் அவருடைய மலர்ந்த முகத்தைக் கண்டு அவரை வணங்கி, அடியாருடைய செய்கையை வினாவ; அவர் மனைவியாரை நோக்கி "ஒருகுடிக்கு ஒரே சிறுவனாகி ஐந்து வயசுடையனுமாய் அவயவப் பழுதில்லாதவனுமாய் இருக்கும் பிள்ளையை மனமகிழ்ச்சியோடு தாய்பிடிக்கத் தந்தையரிந்து சமைத்தால் திருவமுதுசெய்தற்கு உடன்பட்டருளினர்" என்றார் அப்பொழுது மனைவியார் "அவ்வடியவரை அவர் விரும்பியபடி திருவமுது செய்விக்கும்பொருட்டு ஒரு குடிக்கு ஒருவனாஞ் சிறுவனைப் பெறுவது எப்படி" என்று சொல்ல; சிறுத்தொண்டநாயனார் "என்பிராணநாயகியே! இத்திறத்துச் சிறுவனை வேண்டிய திரவியங்களைக் கொடுத்தால் தருவாருளராயினும், நேர்நின்று அச்சிறுவனை அரியத்துணியுந் தந்தை தாயாரோ இல்லை. இனித் தாழ்க்காது நாம் பெற்ற சிறுவனையே அழைப்போம்" என்றார். மனைவியும் அதற்கு இசைந்து, "நம்மைக் காக்கும் பொருட்டு அவதரித்த புதல்வனைப் பள்ளிக்கூடத்தினின்றும் அழைத்துக் கொண்டு வாரும்" என்று சொல்ல; சிறுத்தொண்ட நாயனார் மனமகிழ்ச்சியோடு பள்ளிக்கூடத்துக்கு விரைந்து சென்று, தம்முடைய புதல்வராகிய சீராள்தேவரை எடுத்துத் தோண் மேல் வைத்துக்கொண்டு, வீட்டுக்குத் திரும்பி வந்தார். மனைவியார் எதிர்வந்து புதல்வரை வாங்கி, திருமஞ்சன மாட்டி, கோலஞ்செய்து, நாயகர்கையிற் கொடுத்தார். அவர் அடுக்களையிற் செல்லாது உலகத்தவர்கள் அறியாவண்ணம் ஓர் மறைவிடத்திற் கொண்டு போனார். அப்பிள்ளையைப் பெற்ற தாயார் பாத்திரங்களைக் கழுவிக்கொண்டு வந்தார். தந்தையார் புதல்வரை எடுத்து அவருடைய தலையைப் பிடிக்க; தாயார் அப்புதல்வருடைய இரண்டு கால்களையுந் தம்முடைய மடியிலே இடுக்கி, அவர் கைகள் இரண்டையும் தம்முடைய கைகளினாலே பிடிக்க, அப்புதல்வர் தம்முடைய தந்தை தாயார் மிக மகிழ்கின்றார் என்று மகிழ்ந்து நகை செய்ய, தந்தையார் மனமகிழ்ச்சியோடு ஆயுதத்தினாலே அவருடைய தலையை அரிதலாகிய அரிய செய்கையைச் செய்தார். திருவெண்காட்டு நங்கையார் அறுத்த தலையின் இறைச்சி திருவமுதுக்கு ஆகாது என்று கழித்து, அதனை மறைத்து நீக்கும்பொருட்டுச் சந்தனநங்கையார் கையிற் கொடுத்துவிட்டு, மற்றையுறுப்புக்களின் இறைச்சிகளெல்லாவற்றையும் அறுத்துப் பாகம்பண்ணி, வேறுகறிகளும் அமைத்து, சோறுஞ் சமைத்துக்கொண்டு, நாயகனாருக்குத் தெரிவித்தார்.

நாயகராகிய, சிறுத்தொண்டநாயனார் பெருங்களிப்புடையராகி, விரைந்து சென்று, திருவாத்தியின்கீழ் இருந்த வைரவரை வணங்கி, "சுவாமி! தேவரீர் பிரியப்படி பாகம் பண்ணுவித்தேன் எழுந்தருளிவந்து திருவமுது செய்தருளல்வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார். வீட்டிற்கு வந்த அடியவரை அருச்சித்துத் தூபதீபங்காட்டி வணங்கினார். வணங்கியபின், நாயனாரும் மனைவியாரும் வைரவரை நோக்கி,

"சுவாமீ! திருவமுது படைக்கும் வகை எப்படி" என்று கேட்க; வைரவர் "அன்னத்துடன் கறிகளெல்லாம் ஒருங்கே படைக்கவேண்டும்" என்றார். மனைவியாராகிய திருவெண்காட்டுநங்கையார் அன்னமுங் கறியமுதும் படைத்தார். வைரவர் அதைப் பார்த்து, "நாஞ் சொல்லியமுறையே கொன்ற பசுவினது உறுப்புக்கள் எல்லாவ்றையும் பாகம்பண்ணினீரா" என்று வினாவ; திருவெண்காட்டுநங்கையார் "தலையிறைச்சி மாத்திரம் திருவமுதுக்கு ஆகாது என்று கழித்துவிட்டோம்" என்றார். வைரவர் "அதுவும் நாம் உண்பது" என்றார். அதுகேட்டுச் சிறுத்தொண்டநாயனார் மனைவியாரோடுந் திகைத்து அயர ; சந்தனநங்கையார் "நான் அத்தலை யிறைச்சியை அடியவர் திருவமுதுசெய்யும்பொழுது நினைக்கவரும் என்று முன்னமே பாகம் பண்ணி வைத்தேன்" என்று சொல்லி எடுத்துக் கொடுக்க; திருவெண்காட்டு நங்கையார் முகமலர்ந்து, வாங்கிப் படைத்தார். அதன்பின் வைரவர் சிறுத்தொண்டநாயனாரை நோக்கி, "நாந்தனியே உண்ணோம். சிவனடியார்களைக் கொண்டுவாரும்" என்று அருளிச்செய்ய; சிறுத்தொண்டநாயனார் ஏங்கி, "ஐயோ அடியவர் திருவமுது செய்தற்கு இடையூறு இதுவோ" என்று நினைந்து, வீட்டுக்குப் புறத்திலே போய் சிவனடியார்களைத் தேடிக் காணாது துக்கத்தோடு திரும்பிவந்து, வைரவரை வணங்கி, "சுவாமீ! சிவனடியார்களைக் காணேன். அடியேனும் திருநீறு இடுகின்ற அடியார்தான் என்று விண்ணப்பஞ்செய்ய; வைரவர் சிறுத்தொண்டநாயனாரை நோக்கி, "உம்மைப்போலத் திருநீறு இட்டார் உளரோ? நீர் இருந்து உண்ணும்" என்று சொல்லி பின் திருவெண்காட்டு நங்கையாரை நோக்கி, "இவருக்கு வேறொரு பரிகலத்திருத்தி, அன்னமும் இறைச்சியும் நமக்குப் படைத்ததில் எடுத்துப் படையும்" என்று அருளிச்செய்ய; அவரும் அப்படியே எடுத்துப் படைத்தார். சிறுத்தொண்டநாயனார் வைரவரை ஊட்டவேண்டி, உண்ணப்புகலும், வைரவர் தடுத்தருளி; "ஆறுமாசத்துக்கு ஒருமுறை உண்ணுகின்ற நான் உண்ணாதபொழுது நீர் முன் உண்பது என்னை! நம்முடன் உண்ணும்பொருட்டு உமக்குப் புத்திரன் உண்டேல் அழையும்" என்றார் சிறுத்தொண்டநாயனார் "இப்போது அவன் உதவான்" என்று சொல்ல; வைரவர் " அவன் வந்தாற்றான் நாம் உண்போம் தேடி அழையும்" என்றார். சிறுத்தொண்டநாயனார் தரியாது எழுந்து மனைவியாரோடு விரைந்து வீட்டுக்குப் புறத்திலே போய், "புதல்வனே வா" என்று அழைக்க; மனைவியாரும் நாயகரது ப ணியில் நிற்பாராகி, "சீராளனே! சிவனடியார் அடியவர்கள் உய்யும்பொருட்டு உடனுண்ண உன்னை அழைக்கின்றார் வா" என்று அழைத்தார். அப்பொழுது அப்புதல்வர் பரமசிவனது திருவருளினாலே பள்ளிக் கூடத்தினின்றும் ஓடி வருவார்போல வந்தார். தாயார் அவரை எடுத்துத் தழுவி நாயகர் கையிற்கொடுக்க; அவர் "இனிச் சிவனடியார் திருவமுது செய்யப்பெற்றோம்" என்று மன ம் மிகமகிழ்ந்து, அப்புதல்வரை விரைவிற்கொண்டு அடியவரைத் திருவமுது செய்வித்தற்கு உள்ளே வந்தார். அதற்கு முன் வைரவர் மறைந்தருள; சிறுத்தொண்டநாயனார் அவரைக்காணாமையால் மனங்கலங்கித் திகைத்து விழுந்தார். கலத்திலே

இறைச்சிக்கறியமுதைக் காணாமையால் அச்ச முற்றார். "வைரவர் அடியேங்கள் உய்யும் பொருட்டுத் திருவமுது செய்யாமல் எங்கே ஒளித்தனரோ" என்று தேடி மயக்கங்கொண்டு, புறத்திற்செல்ல; தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர் சேவிக்க, உமாதேவியாரோடும் சுப்பிரமணியசுவாமியோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினார். சிறுத்தொண்டநாயனாரும் மனைவியாரும் புதல்வரும் தாதியாருமாகிய நால்வரும் அவர்களைத் தரிசித்து ஆனந்தவருவி சொரிய, எலும்பும் மனமும் நெக்கு நெக்கு உருக, வணங்கினார்கள். பின்பு பரமசிவனும் பார்வதியம்மையாரும் சுப்பிரமணிய சுவாமியும், அவர்கள் நால்வரையும், தங்களை எக்காலமும் பிரியாது வணங்கிப் பேரின்பத்தை நுகர்ந்து கொண்டிருக்கும் பொருட்டு உடன் கொண்டு திருக்கைலாசத்தை அடைந்தார்கள்.

## 5.10 நாயன்மார்கள் வரலாறு – கணம்புல்ல நாயனார்

**யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் கத்தியரூபமாக செய்தது**

*இலகுவட வெள்ளாற்றுத் தென்பால் வாழு*
*மிருக்குவே ளூரதிப ரெழிலார் சென்னிக்*
*கலைநிலவா ரடிபரவுங் கணம்புல்லர் தில்லைக்*
*கருதுபுலீச் சரத்தாற்குக் காதற் றீப*
*நிலைதரத்தா மிடமிடியா லொருநாட் புல்லா*
*னீடுவிளக் கிடவதுவு நேரா தாகத்*
*தலைமயிரி னெரிகொளுவு மளவி னாதன்*
*றாவாத வாழ்வருளுந் தன்மை யாரே.*

வடவெள்ளாற்றுக்குத் தென்கரையில் உள்ள இருக்கு வேளூரிலே, சிவபத்தியிற் சிறந்தவரும் பெருஞ்செல்வருமாகிய ஒருவர் இருந்தார். அவர் செல்வம் பெற்றதினால் அடையும் பயன் இதுவே என்று, சிவாலயத்தினுள்ளே திருவிளக்கேற்றித் தோத்திரம் பண்ணுவாராயினார். நெடுங்காலஞ்சென்றபின், வறுமைஎய்தி, சிதம்பரத்தை அடைந்து சபாநாயகரைத் தரிசனஞ் செய்துகொண்டு, தம்முடைய வீட்டில் உள்ள பொருள்களை விற்று, அங்குள்ள திருப்புலிச் சரமென்னும் ஆலயத்திலே திருவிளக்கேற்றி வந்தார்.

இப்படி யொழுகுநாளிலே, வீட்டுப்பொருள்களும் ஒழிந்து விட, கணம்புல்லை அரிந்துகொண்டுவந்து விற்று, நெய் வாங்கித் திருவிளக்கெரித்தார். அதனால் அவருக்குக் கணம்புல்லநாயனார் என்னும் பெயர் உண்டாயிற்று. ஒருநாள் தாம் அரிந்து கொண்டு வந்த புல்லு விலைப் படாதொழியவும், தம்முடைய பணி தவறாமல் அப்புல்லையே மாட்டி விளக்கெரித்தார். முன்பு விளக்கெரிக்கும் யாமம் வரையும் எரித்தற்கு அப்புல்லுப் போதாமையால், அடுத்த விளக்கிலே தம்முடைய திருமுடியை

மடுத்து எரித்தார். அப்பொழுது பரமசிவன் பெருங்கருணை செய்தருள, கணம்புல்லநாயனார் சிவலோகத்தை அடைந்தார்.

## 5.11 நாயன்மார்கள் வரலாறு – மெய்ப்பொருள் நாயனார்

மெய்பொருள் நாயனார்

மெய்பொருள் நாயனார் சேதிநாட்டுத் திருக்கோவலூரிலிருந்து அரசாண்ட குறுநிலமன்னர் குலத்தில் அவதரித்தார். அக்குறுநில மன்னர்குலம் மாதொருபாகனார்க்கு வழிவழியாக அன்பு செய்து வந்த மலையான்மான்குலமாகும்.

நாயனார் அறநெறிதவறாது அரசு புரிந்துவந்தார். பகையரசர்களால் கேடுவிளையாதபடி குடிகளைக் காத்துவந்தார். ஆலயங்களிலே பூசை விழாக்கள் குறைவற நடைபெறக் கட்டளை விட்டார். ' சிவனடியார்வேடமே மெய்ப்பொருள் எனச் சிந்தையிற் கொண்ட அவர் சிவனடியார்க்கு வேண்டுபவற்றைக் குறைவறக் கொடுத்து நிறைவு காணும் ஒழுக்கத்தவராக இருந்தார்.

இவ்வாறு ஒழுகிவந்த மெய்பொருள்நாயனாரிடம் பகைமைகொண்ட ஒரு மன்னனும் இருந்தான். அவன் பெயர் முத்தநாதன். அவன் பலமுறை மெய்பொருளாளருடன் போரிட்டுத் தோல்வியுற்று அவமானப்பட்டுப்போனான். வல்லமையால் மெய்பொருளாளரை வெல்லமுடியாதெனக் கருதிய அவன் வஞ்சனையால் வெல்லத்துணிந்தான்.

கறுத்த மனத்தவனான அவன் மெய்யெல்லாம் திருநீறு பூசி, சடைமுடி தாங்கி, ஆயுதத்தை மறைத்து வைத்திருக்கும் புத்தகமுடிப்பு ஒன்றைக் கையிலேந்தியவனாய்க் கோவலூர் அரண்மனை வந்தான். வாயிற்காவலர் சிவனடியாரென வணங்கி உள்ளே போகவிட்டனர். பல வாயில்களையும் கடந்த முத்தநாதன் பள்ளியறை வாயிலை அடைந்தான். அவ்வாயிற் காவலனான தத்தன் " தருணமறிந்து செல்லல் வேண்டும் அரசர் பள்ளிகொள்ளும் தருணம்" எனத் தடுத்தான். ' வஞ்சமனத்தவனான அவன் அரசர்க்கு ஆகமம் உரைத்தற்கென வந்திருப்பதாயும், தன்னைத் தடைசெய்யக்கூடாதெனவும் கூறி உள்ளே நுழைந்தான். அங்கே அரசர் துயின்று கொண்டிருந்தார். அங்கேயிருந்த அரசி அடியாரின் வரவுகண்டதும் மன்னனைத் துயில் எழுப்பினாள். துயிலுணர்ந்த அரசர் எதிர்சென்று அடியாரை வரவேற்று வணங்கி மங்கலவரவு கூறி மகிழ்ந்தார். அடியவர் வேடத்திருந்தவர் எங்குமிலாதோர் சிவாகமம் கொண்டுவந்திருப்பதாகப் புத்தகப்பையைக் காட்டினார். அவ்வாகமப் பொருள் கேட்பதற்கு அரசர் ஆர்வமுற்றார். வஞ்சநெஞ்சினான அவ்வேடத்தான் தனியிடதிலிருந்தே ஆகம உபதேசஞ் செய்யவேண்டும் எனக் கூறினான்.

மெய்பொருளாளர் துணைவியாரை அந்தப்புரம் செல்லுமாறு ஏவிவிட்டு அடியவருக்கு ஓர் ஆசனமளித்து அமரச் செய்தபின் தாம் தரைமேல் அமர்ந்து ஆகமப்பொருளைக்

கேட்பதற்கு ஆயத்தமானார். அத்தீயவன் புத்தகம் அவிழ்ப்பான் போன்று மறைத்து வைத்திருந்த உடைவாளை எடுத்துத் தான் நினைத்த அத் தீச் செயலை செய்துவிட்டான். வாளால் குத்துண்டு வீழும் நிலையிலும் சிவவேடமே மெய்பொருள் என்று தொழுதுவென்றார். முத்தநாதன் நுழைந்த பொழுதிலிருந்து அவதானமாய் இருந்த தத்தன், இக்கொடுரூரச் செயலைக் கண்ணுற்றதும் கணத்திற் பாய்ந்து தன் கைவாளால் தீயவனை வெட்டச் சென்றான். இரத்தம் பெருகச் சோர்ந்துவிழும் நிலையில் இருந்த நாயனார் " தத்தா நமரே காண்" என்று தடுத்து வீழ்ந்தார். விழும் மன்னனைத் தாங்கித் தலைவணங்கி நின்ற தத்தன் ' அடியேன் இனிச் செய்யவேண்டியது யாது?' என இரந்தான். " இச்சிவனடியாருக்கு ஓர் இடையூறும் நேராதவாறு பாதுகாப்பாக விட்டுவா" என்று மெய்பொருள் நாயனார் பணித்தார். மெய்பொருளாளரது பணிப்பின் படியே முத்தநாதனை அழைத்துச் சென்றான் தத்தன். செய்தியறிந்த குடிமக்கள் கொலை பாதகனைக் கொன்றோழிக்கத் திரண்டனர். அவர்களுக்கெல்லாம் " அரசரது ஆணை" எனக் கூறித்தடுத்து நகரைக் கடந்து சென்று நாட்டவர் வராத காட்டெல்லையில் அக்கொடுந் தொழிலனை விட்டு வந்தான் தத்தன். வந்ததும் அரசர் பெருமானை வணங்கி " தவவேடம் பூண்டு வந்து வென்றவனை இடையூறின்றி விட்டு வந்தேன்" எனக் கூறினான். அப்பொழுது மெய்பொருள் நாயனார் " இன்று எனக்கு ஐயன் செய்தது யார் செய்யவல்லார்" எனக் கூறி அன்பொழுக நோக்கினார். பின்னர் அரசுரிமைக்கு உடையோரிடமும், அன்பாளரிடமும் " திருநீற்று நெறியைக் காப்பீர்" எனத் திடம்படக் கூறி அம்பலத்தரசின் திருவடி நிழலைச் சிந்தைசெய்தார். அம்பலத்தரசு அம்மையப்பராக மெய்பொருளாளன்பாருக்குக் காட்சியளித்தனர். மெய்பொருளாளார். அருட்கழல் நிழல் சேர்ந்து இடையறாது கைதொழுதிருக்கும் பாக்கியரானார்.

## 5.12 சைவசமயத்தில் வழிபாடு

சைவ சமயத்தில் வழிபாடு எ ன்பது இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகிறது. கடவுள் நம்பிக்கை தோன்றிய காலம் முதல் இவ்வழிபாடும் உடன் தோன்றிற்று. கடவுள் நம்பிக்கையைவளர்த்துக் கொள்ளச் சாதனமாக வழிபாடு அமையப்பெற்றது. வேத ஆகமங்கள் இவ்வழிபாடுகள் நடத்தும் முறைமைகளை வகுத்துக் காட்டியுள்ளன. காலத்திற்குக் காலம் வழிபாட்டு முறைமைகளாகிய சடங்குகள் மாறினாலும் வழிபாடு மாறவில்லை. தொன்று தொட்டு நடந்து வருகிறது.

அக்காலத்தில் இயற்கை இடர்களைக் கண்டு மக்கள் அஞ்சினார்கள். அதனால் அச்சத்திற்குரிய பொருள்களைக் கடவுள்களாகக் கொண்டு வழிபட்டதால் அவ்வழிபாடு முதன்முதலில் இயற்கை வழிபாடாக அமைந்தது.

இந்த இயற்கை வழிபாடு சிறுகச் சிறுக வளர்ந்து முழுமுதற் கடவுளை உருவ வழிபாட்டில் வழிபடத் தொடங்கிய பிறகு வழிபாட்டு முறைமைகளும், விழாக்களும்,

சிறப்புப் பூசனைகளும் தோன்றின. வழிபாட்டில் பூசனை என்ற சடங்கு அன்றாடப் பூசனை என்றும் சிறப்புப் பூசனை என்றும் வகுத்துச் செய்யப்பட்டது. இதனைத் திருக்குறள், மழை இல்லை என்றால் வழிபாட்டில் சிறப்புப் பூசனை நடக்காது என்று குறிப்பிடுகிறது.

சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

(திருக்குறள், வான்சிறப்பு - 8)

இத்தகைய பூசனைகள் வளர்ந்து பூசனை செய்வதற்குரிய முறைமைகள், அதற்குரிய கருவிகள், நேரங்கள் என்றெல்லாம் சைவ சமய வழிபாட்டில் வகுத்துக் காட்டப் பெற்றன.

**அன்றாட வழிபாடு**

வழிபாடு என்பது பின்பற்றுதல் அல்லது வணங்குதல் என்ற பொருளைத் தரும். சைவ சமயம் உருவ வழிபாட்டைக் கொண்ட சமயம் ஆகும். காண முடியாத கடவுளுக்குப் பலவிதமான உருவங்களை உண்டாக்கி அவற்றை நாள்தோறும் வழிபட்டு வருதல் சைவ சமயத்தின் வழக்கமாயிற்று. இந்த உருவங்களை எல்லாம் ஓரிடத்தில் அமைத்து வழிபட்டதால் திருக்கோயில் வழிபாடு முக்கியத்துவம் பெற்றது. திருக்கோயில் அமைத்தல் எ ன்பது உயர்ந்த பணியாகவும் கருதப் பட்டது.

வீடுகளில் மனிதர்கள் எப்படி வாழுகின்றார்களோ அதுபோலவே திருக்கோயில்களிலும் வாழ்வியல் முறையில் வழிபாடுகள் அமைக்கப் பெற்றன.

நாள்தோறும் திருக்கோயில்களில் குப்பைகளைக் கூட்டிச் சுத்தம் செய்தல், திருக்கோயில்களை மெழுகுதல் ஆகிய பணிகள் வழிபாட்டு முறைகளாக மாறின. கோயில்களில் விளக்கேற்றுதல், நறுமணம் வீச நறும்புகைகளை உண்டாக்குதல்

என்பன நாள்தோறும் செய்யும் பணிகள் ஆயின. எப்படி வீடுகளில் வாழுகிற மக்கள் நீராடி அழகு படுத்திக் கொண்டு உணவுகளை உண்டு வாழுகின்றார்களோ, அதுபோல நாள்தோறும் திருக்கோயிலில் உள்ள கடவுளர்களுக்கு நீராட்டுதலை அபிடேகமாகவும் அழகு செய்தலை அலங்காரமாகவும், உணவு படைத்தலை நைவேத்தியமாகவும், இவற்றைச் செய்வதை அன்றாட வழிபாடாகவும் கொண்டனர்.

இவை நாள்தோறும் நடக்கிற பொழுது ஒரு நாளினை முதல் காலம், இரண்டாம் காலம், மூன்றாம் காலம், நான்காம் காலம், ஐந்தாம் காலம் எனப் பிரித்துக் கொண்டு பூசனைகள் செய்யப் பெற்றன. இந்தக் காலங்களுக்குப் பெயர்களும் கொடுக்கப்பட்டன. விசுவரூப வழிபாடு, காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என்று காலங்களுக்குப் பெயரிட்டு ஒவ்வொரு நாளும் வழிபாடு

செய்யப்பெற்றது. விசுவரூப வழிபாடு என்பது அதிகாலையில் நடத்தப்பெறும் சடங்காகும். காலசந்தி காலை சுமார் 9 மணிக்கு நடத்தப்படுவதாகும். உச்சிக்காலம் என்பது நண்பகலில் நடத்தப்பெறுவதாகும். சாயரட்சை என்பது மாலையிலும், அர்த்தசாமம் முன் இரவிலும் நடத்தப்பெறுவதாகும். இத்தகைய வழிபாட்டு நேரங்கள் நாள்தோறும் நடத்தப்படுகின்ற வழிபாடுகளுக்குரியனவாகக் கொள்ளப்பட்டன.

பிற சமயங்களில் வார நாட்களில் குறிப்பிட்ட நாட்களில்தான் வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஆனால் சைவ சமயத்திலோ வார நாட்கள் முழுமையும் வழிபாடுகள் நடத்தப் பெறுகின்றன. இவ்வழிபாடுகளில் வழிபாடு செய்கின்றவர்கள் குருக்கள் என்றழைக்கப்படுகின்றனர். அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகளும், மேற்கொள்ளும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய செயல்முறைகளும் வகுக்கப் பெற்று நடைமுறைப் படுத்தப்பெற்றன. அதாவது உடல் தூய்மையோடு வழிபாடு செய்ய வேண்டும். திருநீறு உருத்திராக்கம், பூணூல் அணிந்திருக்க வேண்டும். சட்டை அணிந்து கொள்ளக் கூடாது என்ற மரபுகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. இத்தகையோர் வழிபாடாம் பூசனைகளைச் செய்வதால் பூசாரிகள் என்று அழைக்கப்பட்டனர். சைவ சமயத்தில் இவ்வழிபாட்டைச் சிவன் கோயில்களில் செய்பவர்கள் அந்தணர்கள் ஆவார்கள். அதிலும் அவர்கள் சிவாச்சாரியார் மரபினர் ஆவார்கள். சிறு கோயில்களில் வழிபாடு செய்கிறவர்கள் பூசாரிகள் என்றே அழைக்கப்பட்டனர்.

நாள் வழிபாட்டில் தெய்வ உருவங்களுக்கு நீர், பால் கொண்டு அபிடேகம் செய்தல், மலர்களால் அலங்கரித்தல், விளக்குகளால் அழகு செய்தல், உணவுப் பொருள்களைப் படைத்தல், தீபங்களை ஏற்றி வழிபாடு செய்தல் ஆகியவை இன்றியமையாத வழிபாடுகளாகக் கருதப்பட்டன. இது திருமுறையில்,

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் - (அப்பர்தேவாரம்) என்றும்,

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை - (திருமந்திரம்)

என்றும் குறிக்கப் பெற்றுள்ளது. இத்தகைய சடங்குமுறை வழிபாடுகள் நாள்தோறும் நடப்பதால் அவற்றைப் புறவழிபாடு என்று சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. (திருக்கோயில் வழிபாடு இல்லாது, வழிபாட்டு முறைகளை மனத்தகத்தே கொண்டு வந்து மனத்தாலே கடவுளை வழிபாடு செய்வது அக வழிபாடாகும்).

கோயில் வழிபாட்டில், வழிபட வருகின்றவர்களுக்குத் திருநீறும், பிரசாத வகைகளும் இறைவன் அருளாக வழங்கப் பெற்றன. வழிபாடு நடக்கின்ற பொழுது மங்கல இசைக் கருவிகள் முழக்கப் பெற்றன. இசைக்கருவிகளை முழக்குகின்றவர்களும் திருக்கோயில் பணியாளர்களாகவே கருதப்பட்டனர். வழிபாடு செய்கின்றவர்களுக்கு எவ்வாறு நெறிமுறைகள் அமைக்கப் பெற்றனவோ அதுபோல

வழிபட வருகின்ற மக்களுக்கும் விதிமுறைகள் வகுக்கப் பெற்றன. உடல் தூய்மையோடு திருக்கோயிலுக்கு வரவேண்டும். திருநீறு அணிந்து கொண்டு வர வேண்டும். இறைவனுக்குரிய பெயர்களையோ அல்லது அடியார்களின் பாடல்களையோ கூறிக் கொண்டு வர வேண்டும். பூசனைக்குரிய பொருள்களைக் கொண்டு வர வேண்டும். கோயில் பணிகளைச் செய்ய வேண்டும். கரங்கூப்பி வணங்க வேண்டும், தரையில் விழுந்து வணங்க வேண்டும் என்பன. இவ்வாறெல்லாம் வழிபாடுகள் நாள்தோறும் திருக்கோயில்களில் நடைபெற்று வருகின்றன.

### சிறப்பு வழிபாடு

நாள்தோறும் வழிபடுகின்ற வழிபாட்டோடு சிறப்பு வழிபாடுகள் சில குறிப்பிட்ட நாள்களில் சைவ சமயத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் சிறப்பு வழிபாடுகளில்அடிப்படை வழிபாடுகள் மாறுவதில்லை. நாள்தோறும் நடைபெறும் வழிபாட்டோடு சிறப்பு வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுவன ஐம்பொன்னால் ஆகிய திருவுருவங்களை உலாவாக எடுத்து வருதல், வேள்விகள் நடத்துதல், சிறப்பான அலங்காரம் செய்தல் ஆகியவையாகும். சைவ சமயத்திற்குரிய சிறப்பான நாட்களில் திருக்கோயில் இருக்கும் இடங்களைப் பொறுத்தும், திருக்கோயில் அமைந்துள்ள சூழலைப் பொறுத்தும் சிறப்பு விழாக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

பொதுவான சிறப்பு விழாக்கள் எல்லாத் திருக்கோயில்களிலும் நடைபெறும். எடுத்துக்காட்டாக விநாயகர் சதுர்த்தி விழாவைக் குறிப்பிடலாம். விநாயகர் சிலை எந்தெந்தத் திருக்கோயில்களில் இருக்கின்றதோ அங்கெல்லாம் இந்த விழா நடைபெறும்.

நவராத்திரி விழாவும் புரட்டாசி மாதத்தில் அம்பிகை இருக்கும் அனைத்துத் திருக்கோயில்களிலும் நடைபெறும். சில சிறப்பான விழாக்கள் திருவுருவங்களின் சிறப்பை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும். இவ்விழாக்களில் மாசிமக விழா, கார்த்திகைத் தீப விழா, பூச விழா ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இந்த விழாக்கள் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். கடலோரப் பகுதிகளில் இருக்கின்ற திருக்கோயில்களில் மாசிமகத்தில் நடைபெறுகிற விழா மாசிமக விழாவாகும். கார்த்திகைப் பௌர்ணமி நாளில் மலையைச் சார்ந்த திருக்கோயில்களில் நடைபெறும் விழா கார்த்திகைத் தீப விழாவாகும். தை மாதத்தில் பௌர்ணமி நாளில் முருகன் கோயில்களில் நடைபெறும் விழா பூச விழாவாகும். இத்தகைய விழாக்களோடு விரதம் இருந்து நடத்தப் பெறும் விழாக்களும் உண்டு.

முருகனுக்கு விரதம் இருந்து ஐப்பசி மாதத்தில் நடைபெறும் விழா கந்தசஷ்டி விழாவாகும். கிருத்திகை நாளில் விரதம் இருந்து கொண்டாடப்படும் விழா கிருத்திகைர விழாவாகும். திருவாதிரை நாளில் விரதம் இருந்து நடத்தப்படும்

விழாவிற்குத் திருவாதிரை விழா என்பது பெயராகும். இத்தகைய விழாக்கள் தவிர மாதத்தில் வருகின்ற பிரதோஷ நாள், அமாவாசை நாள், பௌர்ணமி, சதுர்த்தி, வார வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் திருக்கோயில்களில் சிறப்புப் பூசனை நடைபெறுவதும் உண்டு. இவை அனைத்தும் சிறப்பு வழிபாடுகள் ஆகும்.

## 5.13 திருவிழாக்கள் - பிரதோசம்

முனைவர் ந . இரா. சென்னியப்பனார்

பிரதோச வழிபாடு புராணக் கதையையொட்டி ஏற்பட்டதாகும். தேவர்களும், அசுரர்களும் நீண்ட காலப் போர் செய்து ஆற்றல் இழந்தனர். மீண்டும் ஆற்றல் பெறுவதற்கு வழி என்ன என்று எண்ணினர். அதற்குப் பாற்கடல் கடைந்தால் உண்டாகும் அமுதை உண்டால் பேராற்றல் பெறலாம் என்று எண்ணி இருசாரரும் கூட்டுச் சேர்ந்து பாற்கடலை கடையத் தொடங்கினர்.

தேவர்களும் அசுரர்களும் என்றும் ஒருவர்க்கொருவர் பகைவகராகவே இருந்துள்ளனர். நல்ல பயன் அமுது கிடைக்கும் என்பதால் கூட்டு சேர்ந்து செயல்பட்டனர்.

‘ வட வரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி கடல்
வண்ணன் பண்டொருநாள் கடல் வயிறு கலக்கினையே’
- சிலப்பதிகாரம்.

வாசுகியின் தலைப் பாகத்தை அசுரர்களும் வால்பாகத்தை தேவர்களும் பிடித்து இழுத்துக் கடையத் தொடங்கினர். அப்போது வாசுகி நஞ்சைக் கக்கியது. தொடர்ந்து கடைந்தபோது பாற்கடலில் நஞ்சு தோன்றியது. இரண்டு நஞ்சும் சேர்ந்து கொதித்து எழுந்தது. அசுரர்களும் தேவர்களும் அஞ்சி ஓடினர். அங்கும் இங்கும் ஓடிய தேவர்கள் திருக்கயிலை சென்றடைந்தனர் . பின் நந்தி தேவரின் (இடப வாகனர்) அண்டத்தில் ஒளிந்து கொண்டனர். இறைவன் இடப தேவரின் இரு கொம்புகளுக்கு இடையே தோன்றி நடனம் செய்து தேவர்களுக்குக் காட்சி கொடுத்தார். இறைவன் கணநாதர்களுள் ஒருவரான சுந்தரரை அனுப்பி நஞ்சை உள்ளங்கையில் உருட்டி வரச் செய்தார்.

வாசுகி கக்கிய நஞ்சு, பாற்கடலில் உண்டான நஞ்சு ஆகிய இரண்டும் சேர்ந்து ஆலம் + ஆலம் = ஆலாலம் ஆயிற்று. ஆலாலத்தைக் கொண்டு வந்ததால் சுந்தரர், ஆலாலசுந்தரர் எனப்பட்டார். இந்தக் கணநாதராகிய ஆலால சுந்தரர் தாம் பின்னர் திருநாவலூரில் சுந்தரமூர்த்தி நாயனாராக அவதாரம் செய்துள்ளார்.

ஆலால சுந்தரர் கொண்டு வந்த நஞ்சினை இறைவன் உட்கொண்டார்.

அம்மையின் கைகளால் தடுக்கப்பட்டு, ‘ வார்சடையோன் அருந்திய நஞ்சு அமுது ஆக்கிய அம்பிகையே’ என்ற அபிராமப் பட்டரின் கூற்றுப்படி அமுதாயிற்று.

உள்ளே சென்றிருந்தால் உள்ளே இருக்கக் கூடிய உயிரினங்களுக்குத் தொல்லை நேர்ந்திருக்கும். வெளியே உமிழ்த்திருந்தால் வெளியே உள்ள உயிரினங்களுக்குத் துன்பம் நேர்ந்திருக்கும். அதனால் கண்டதிலே தங்கச் செய்தார். நஞ்சுண்டன், நீலமணிமிடற்றன் ஆனான்.

இறைவன் ஆலகால நஞ்சையுண்டு தேவர்களைக் காத்து அருள்புரிந்தார். தேவர்களும் அசுரர்களும் அச்சமும் கவலையும் நீங்கித் துதித்து வழிபட்டனர்.

இறைவன் நஞ்சுண்டு காத்து அருள் செய்து இடபதேவரின் கொம்பின் நடுவில் நின்று திருவருள் பாலித்த காலம் வளர்பிறையும் திரயோதசியும், சனிக்கிழமையும் சேர்ந்த காலமாகும். இந்த நேரத்தில் வழிபாடு செய்வோருக்கு எல்லா நலன்களையும் தரவேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். இறைவனும் அவ்வாறே அருள் செய்தான்.

பிரதோச நாளில் விரதமிருந்து பிரதோசம் வருவதற்கு முன் நீராடிக் கோவிலுக்கு செல்ல வேண்டும். மாலை 4.30 மணி முதல் 6.30 மணிவரை பிரதோச காலமாகும்.
கோவிலில் விநாயகரை வழிபட்டபின் இடபதேவரை முன் வணங்க வேண்டும். அங்கிருந்து இடமாகச் சென்று சண்டீச நாயனாரை வணங்கிப் பின் வந்த வழியே திரும்பி வந்து இடப தேவரை வணங்க வேண்டும். அங்கிருந்து வலமாகச் சென்று கோமுகி வரை சென்று அதனைத் தாண்டாமல் முன் வந்த வழியே திரும்பி வந்து இடப தேவரை வணங்க வேண்டும். மீண்டும் அங்கிருந்து இடமாகச் சென்று சண்டீசுவரரை வணங்கிச் சென்ற வழியே திரும்பிச் சென்று இம்முறை இடபதேவரை வணங்காமல் வலமாகச் சென்று கோமுகிவரை சென்று மீண்டும் சென்ற வழியே திரும்பி வந்து இம்முறையும் இடபதேவரை வணங்காமல், இடமாகச் சென்று சண்டீசுவரரை வணங்கிச் சென்ற வழியே திரும்பி வந்து இடபதேவரை வழிபட்டு, அவருடைய இரண்டு கொம்புகளுக்கும் நடுவில் அருவுருவாய் உள்ள சிவபெருமானை வணங்க வேண்டும். இதற்குச் சோமசூத்திரப் பிரதட்சணம் என்று பெயர். தேவர்கள் நஞ்சு கண்டு அஞ்சி அங்கும் இங்குமாக ஓடியதை அடிப்படையாக கொண்டது இப்பிரதட்சணம்.

இறைவன் ஆலால நஞ்சுண்ட செய்தி சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், திருமுறைகள், புராணங்கள், தனிப் பாடல்கள் முதலியவற்றில் ஆங்கங்கே

குறிப்பிடப்படுகின்றது. பிரதோச வழிபாடு எங்கும் குறிப்பிடப்படவில்லை. திருவோணம், திருவாதிரை, தைபூசம், கார்த்திகை விளக்கு, மாசிமகம், பங்குனி உத்திரம் முதலியவை இலக்கியங்களில் காணப்படுகின்றன. அதுபோல் அரசர்கள் பிறந்த நாள் விழா, ஆடிப் பதினெட்டு, தைப் பொங்கல், தைப்பூசம், பங்குனி உத்திரம், கிரகண நாள் முதலியவை இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. ஆனால் எங்கும் பிரதோச வழிபாடு பற்றிய செய்தி இல்லை.

தற்போது மக்கள் ஆர்வம் காரணமாகப் பிரதோச வழிபாடு மிகச் செல்வாக்குப் பெற்றுள்ளது. நஞ்சுண்ட செய்தியின் அடிப்படையில் சிவன் கோவில்களில் பிரதோச வழிபாடு செய்வது ஏற்றது. இன்று திருமால் கோவில், விநாயகர் கோவில், முருகன் கோவில், கிராம தேவதைகளின் கோவில்களிலும் பிரதோச வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வழிபாடு வளர்ச்சி பெறுவது நல்லதுதான். அதற்காக புரியாமல் செய்வது கூடாது.

அசுத்த மாய காரியான நம் பூத உடம்பின் எச்சில் வாயை வைத்து ஞானவடிவான நந்தியின் காதில் நம் தேவைகளைச் சொல்லுவது நற்செயலாகாது. இறைவன் நஞ்சுண்ட செய்தி இலக்கியங்களில் உண்டு. ஆனால் பிரதோச வழிபாடு கூறப்பெறவில்லை. நஞ்சுண்ட வரலாற்றை திருமூலர் தத்துவ முறையில் பாடியுள்ளார்.

இறைவனுக்கு ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்யோசாதம் ஆகிய ஐந்து முகங்கள் உண்டு. ' செம்முகம் ஐந்துளான்' என்பர் கச்சியப்ப சிவாச்சாரியார். ஐந்து முகங்களுடன் சதாசிவ மூர்த்தியாக இருந்து ஐந்தொழில் செய்கின்றான். பொது நிலையில் இவ்வாறு ஐந்தொழில் நடைபெற்றாலும் நிலவுலகில் உள்ளவர் வழிபாட்டிற்கு இரங்கி அருள் செய்வதற்கு இறைவன் கீழ்நிலை முகம் (அதோமுகம்) கொள்கிறான். நஞ்சுண்டு இறைவன் அருள்புரிந்தான். இறைவனின் கீழ்நிலை முகமே உலகத்தை பாதுகாப்பது. அதற்கு அடையாளமாக இறைவன் கறுத்த கண்டம் உடைய வடிவோடு உள்ளான். என்பதை ஒருவரும் உணர்வதில்லை. ஆனால் நஞ்சுண்டதால் உண்டாயிற்று என்று மட்டும் கூறி வருகின்றனர். கறைமிடற்று அண்ணல் மார்பில் அணியும் மாலையும் இறந்தவர்களுடைய வெண்மையான தலையே ஆகும் என்பதனையும் அறிவாரில்லை.

*" அண்டமொடு எண்திசை தாங்கும் அதோமுகம்*
*கண்டம் கறுத்த கருத்து அறிவாரில்லை*
*உண்டது நஞ்சம் என்று உரைப்பார் உணர்விலோர்*
*வெண்டலை மாலை விரிசடை யோற்கே"*

என்பது திருமந்திரப் பாடல்.

முற்றும்